உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ ஆனிமீ [பகுதி ௮.

Vol. XVII. June—July, 1919. No. 8.

## 13-ம் புறப்பாட்டும் அதன் உரையும்-II*

இச்செய்யுளிறுதியின்கண்ணுள்ள 'கிழவோன்' என்பது விளிப்பெயரெனக்கொண்டு இவ்விடத்தே விளித்தற்குரியோன் சேரனாதலின் 'கிழவோன்' அச்சேரனேயாதல்வேண்டுமென மாணவ நண்பரவர்கள் கூறுகின்றார்கள். விளியென முடிவுகாணுதற்குத் தொல்காப்பிய இலக்கணமும் தமிழிலக்கியங்களும் துணைபுரிவனவாதலை விளக்கிக்காட்டிக் 'கிழவோன்' என்ற இயற்கையண்மைவிளி பயன்பற்றித் தெரிந்தாளப்பட்டதெனக் குறிப்பித்தார்கள்.

2. முதலாவது நண்பரவர்கள் ஆதாரமாகக்கொண்ட தொல்காப்பியவிதி அவர்களுக்கு அநுகூலமாக வுள்ளதாவென நோக்குதல்வேண்டும். 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றது தொல்காப்பிய விளியியற்சூத்திரமாதலின் 'கிழவோன்' என்பது இயல்பாய் நின்று அண்மைவிளியாயிற்று எனக்கொள்ளப்பட்டது. சொல்லதிகாரத்திற்கு உரையிட்ட சேனாவரையரும் பிறவுரையாளர்களும் இ, உ, ஐ, ஓ என்ற நான்கீற்று அண்மைக்கண்விளியேற்குஞ் சொற்கள் இயற்கையாய்விளியேற்கும் என்றெழுதியுள்ளார்கள். என்வே, னகரமெய்யீற்றுப் பெயராகிய 'கிழவோன்' என்னுஞ்சொல் இயல்பாய் நின்று அண்மைவிளியில் வந்ததென்றற்கு இச்சூத்திரம் ஆதாரமாதலில்லை யென்பபதே பலவுரையாசிரியர்களது கருத்துமாம்.

* இஃதொருதலை முடிவாதலாலிதன் மறுதலை முடிவும் அடுத்துள்ளது (ப-ர்.)

3. மெய்யீற்றுப் பெயர்கள் இயல்பாய் நின்று அண்மைவிளி யேற்றுவந்ததற்குரிய உதாரணங்களை அவர்களறியாமையின் அங்ஙனம் வழுப்படச் சூத்திரத்திற்கு உரைவகுத்தார்களென்று கூறுவதாயின் அதுவும் பொருந்தாதாம். ஏனெனின், 'ஏனைப்புள்ளி யீறுவிளி கொள்ளா' என்ற சூத்திரத்தின் உரையில், னகரவீற்றுயர்திணைப் பெயராகிய 'நம்பன்' இயல்பாய் நிற்றலை யெடுத்துக்காட்டினர் நச்சினர்க்கினியர். சேனவரையரும் 'கூறப்பட்ட புள்ளியீறு பிறவாற்றான் விளி கொள்வனவுள' என்று பொதுப்படக் கூறினர். இங்ஙனம் அறிந்து வைத்தும் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றதனை விளியின் பொதுலக்ஷணமாகக் கொள்ளாது நான்கு உயிரீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்குங் காலத்துமட்டும் ஏற்புடையதொரு லக்ஷணமாக உரையாளர்கள் கொண்டார்கள். இதனானே சூத்திரம் நிறுத்தமுறையில் அதற்கு இப்பொருளைத் தவிரப் பிறவாறு பொருள் காணுதல் தொல்காப்பியரது கருத்தொடு மாறுபடுமென்று அவர்கள் ஆராய்ந்து வைத்தமை நன்கு வெளியாகின்றது. நிறுத்தமுறை நோக்காது தனிப்படநோக்கினால் விளிமரபு முழுவதற்கும் பொதுப்படக் கூறிய லக்ஷணமாகத் தோன்றுநிற்பவும், அவ்வாறுகொண்டு'நம்பன்'(சீவகசிந்-1975) 'கடல்வண்ணன்' (சிலப்-XVII) முதலியவற்றிற்கெல்லாம் மிக எளிதில் ஆதாரம் காண்டலைவிட்டு 'ஏனைப்புள்ளி யீறுவிளிகொள்ளா' என வேண்டா கூறியதற்குப் பயன் கூறுமுகத்தால் அமைத்துக் கோடலின் காரணம் பிறிதொன்று சிறந்ததாகக் காணுதலரிதாம்.

ஆனல், அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரவுரையின்கண்ணே (XVII-ஆய்ச்சியர்குரவை) "கடல்வண்ணன்—அண்மைவிளி; அண்மைச்சொல்லே இயற்கையாகும் என்பதனுல்; இது மேலுங்கொள்க" எனவுரையிட்டனர். இதனல் இச்சூத்திரம் பொதுப்படக் கூறப்பட்டதாக அப்பேரறிவாளர் கருதினரென்பது வெளிப்படை. *இளம்பூரணர், சேனவரையர், நச்சினர்க்கினியர் ஆகிய மூன்றுரையாசிரியன்மாரும் உயிரீற்றுயர்திணைப் பெயர்கள் அண்மை விளியேற்றற்குரிய

* இவரது உரை அச்சில் வெளிவாராததாகலின் அதனைக் கீழே தருகின்றேன். "அண்மைச்சொல்லே இயற்கையாகும்" என்-னின், இதுவும் இறந்தது காத்தது. அணியாரைக் கூவுமிடத்து, அவை இயல்பேயாய் விளியேற்குமென்றவாறு. உ-ம். நம்பிவாழி; நங்கைவாழி; வேந்தவாழி; எனவரும்.

விதியமைத்தலே தொல்காப்பியரது கருத்தென்பதுபட எழுதினர். இவ் விருதிறப்பட்ட முடிபினும் எதனைத் தொல்காப்பியரது கருத்தாக நாம் கொள்ளுதல்வேண்டும்? இளம்பூரணரை யுள்ளிட்ட மூவரும் தொல் காப்பியத்திற்கு வரன்முறையில் உரையிட்டவர்கள். ஆதலின் நூலா சிரியனது கருத்து இன்னதென்றறிதற்கண் பழக்க மிகுதியும் உடைய வர்கள். இம்மூவரும் ஒருவர்பின்னொருவராய் வந்தவர்களாவர். ஒரு வர் கூறியவற்றிற் பிழைகாணப்படுமாயின் அதனை நன்கெடுத்துக் காட்டி உண்மை யுரையினை வெளியிடுவதன்கண் சிறிதுந்தாழ்க்குமியல் பினரல்லர். இவருள், ஒவ்வொருவரும் பிறர் கூறுமுறையைப் பின் பற்றிக் கதானுகதிகமார்க்கத்திற் செல்லாது தாமேதனிப்படவாராய்ந்து உரைவகுக்குந் தன்மையாளர். மற்று, அடியார்க்கு நல்லாரோவெனின் சிலப்பதிகார காப்பியத்திற்கு உரையிடுவதே பிரதான நோக்கமாக வுடையவர். ஆதலின் இத்தொல்காப்பிய சூத்திரத்தின் பொருளமைதி யினை நிச்சயித்தற்கண் அதனுரைகாரர்களோடொப்ப இவரும் ஊன்றி யாராய்ந்தாரென்றல் அசம்பாவிதமாம். ஆகவே, இவ்விருதிறத்தாருள் ளும் இளம்பூரணர் முதலினோரது கருத்தொடு நாம் உடன்படுவதாயின், அது தவறாகாதென்றே நினைக்கிறேன். எனினும் தொல்காப்பியரது கருத்து இன்னதென்று அறிதற்கு அவரது நூலொன்றே தக்க கருவி யாம். அக்கருவியின் துணைகொண்டு இச்சூத்திரம் நுதலிய தின்ன தென்று நோக்குதல் வேண்டும்.

விளிமரபின்கண்ணே இச்சூத்திரம் நிறுத்த முறையை யெடுத் துக்கொள்க. விளிமரபினை ஆசிரியர் 37 சூத்திரங்களாற் (*சூ. 120-136) கூறுகின்றார். விளியினது பொதுவிலக்கணங்கூறி, அதனையேற் பது பெயரென்றுரைத்து, அங்ஙனம் ஏற்கும் பெயர்களைப் பகுத் துணர்த்துதற்குச் செல்லுகின்றார் (120-1). விளியேற்கும் பெயர்களை மூவகைப்படுத்தினர்:—உயர்திணைப் பெயர், அஃறிணை விரவுப்பெயர், அஃறிணைப் பெயரென. உயர்திணைப் பெயரைப்பற்றி யுள்ளன 122

* இங்கே குறித்த சூத்திரஎண்கள் நச்சினார்க்கினியருரைப்பதிப்பிற்காணப் படுவன.

முதல் 151 முடியவுள்ள சூத்திரங்கள். அஃறிணை விரவுப்பெயர் 152-ஆம் சூத்திரத்திலும், அஃறிணைப்பெயர் 153-ஆம் சூத்திரத்திலும் கூறப்படுகின்றன. 154-ஆம் சூத்திரத்தில் முற்கூறிய மூவகைப் பெயரும் சேய்மைக்கண் விளியேற்குமுறை யுணர்த்தப்படுகின்றது. பெயர்ச் சொற்களேயன்றி 'அம்ம' வென்னும் அசைச்சொல்லும் விளியேற்கு மென்பது 155-ஆம் சூத்திரத்தாற் சொல்லப்படுகின்றது. உயர்திணைப் புள்ளியிற்றுப் பெயருள் விளியேலாதன கூறுகின்றது 156-ஆம் சூத்திரம்.

உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமிடத்து உயிரீற்றுப்பெயர்கள், மெய்யீற்றுப்பெயர்கள் எனப்பகுக்கப்படுகின்றன. இ, ஐ, உ, ஓ, என்னும் நான்கு உயிரீற்றுப் பெயர்கள் மாத்திரமே விளியேற்பன (122). அங்ஙனம் விளியேற்கும்பொழுது பொதுவாக வுண்டாந்திரிபுகள் 123, 124, 125-வது சூத்திரங்களிற் சொல்லப்படுகின்றன. ஏனையுயிரீற்றுப் பெயர்கள் விளியேலா வென்பது 126-ஆம் சூத்திரத்தாற் பெறப்படுகின்றது. பின்பு இகரவீற்று அளபெடைப் பெயரும் ஐகாரவீற்று முறைப்பெயரும் விளிகொள்ளுங்கால் அடையுந்திரிபுகள் சிறப்பாக வுணர்த்தப்படுகின்றன (127-128). இதன் பின்னர் அண்மைச்சொல்லே இயற்கையாகும் (129) என்னும் சூத்திரம் கூறப்பட்டுள்ளது. இச் சூத்திரத்தினை யடுத்துப் புள்ளியீற்றுயர்திணைப் பெயர்கள் விளியேற்குமுறை தோடங்கப்படுகின்றது. இங்கு எடுத்துக்கூறிய முறையில் 'அண்மைச்சொல்லே' என்று தொடங்கும் 129-ஆம் சூத்திரத்திற்கு எவ்வாறு பொருள்கொள்ளுதல் வேண்டும்? 128-ஆம் சூத்திரமுடிய உயிரீற்றுப் பெயர்கள் விளியேற்குமாறு கூறப்பட்டிருக்கின்றது. 130-ஆம் சூத்திரத்தில் மெய்யீற்றுப் பெயர்கள் விளிக்கப்படுமுறை ஆரம்பிக்கப்படுகின்றது. இங்ஙனம் ஆரம்பித்தலினாலே இதற்கு முன்னுள்ள 'அண்மைச்சொல்லே' என்ற சூத்திரம் உயிரீற்றுப் பெயர்களைக்குறிப்பதென்பது எளிதிலறியத்தகும். அவ்வுயிரீற்றுப் பெயர்களைப்பற்றிக்

கூறும் சூத்திரங்களின் இறுதியில் இச்சூத்திரம் வைக்கப்பெற்றிருத்த லின், இஃது உயிரீற்றுப் பெயர்களனைத்திற்கு முரிய சூத்திரமென் றுணரப்படுமேயன்றிப் பிறவாறு கூறுதல் பொருந்தாது.

விளிமரபு அனைத்திற்கும் பொதுவான சூத்திரமாக இது கருதப் பட்டதாயின், அங்ஙனம் பொதுவாகவுள்ள சூத்திரத்தினையடுத்து இது வும் வைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது பொதுவென அறிவித் தற்குரிய சொற்கள் இதனுட் காணப்படுதல் வேண்டும். விளிமரபில், முதலிரண்டு சூத்திரங்களைத்தவிர, சேய்மை விளியைப்பற்றிக் கூறுஞ் சூத்திரமொன்றே ஐயமின்றிப் பொதுப்படவுள்ளது. அண்மையொடு நெருங்கிய பொருட்டொடர்புளது சேய்மை. இத்தொடர்புநயம்பற்றி யே அண்மை சேய்மை விளிகட்குரிய விதியினை ஒரே சூத்திரத்தினுள் அமைத்தார் பவணந்தி முனிவரர். ஆகவே இப்பொதுச்சூத்திரத் தினையடுத்து அண்மைவிளிப் பொதுச்சூத்திரத்தினையும் அமையவைத் தலிற் சிறந்த வைப்புமுறை காணுதற்கரிதாம். இங்ஙனம் இயல்பா யும் பொருத்தமாயும்உள்ள வோரிடத்தில் இச்சூத்திரம் வைக்கப்பெறு மையானே, அது பொதுச்சூத்திரமென்ற கருத்து ஆசிரியர்க்கில்லை யென்று துணிதல்தகும். மேலும் சேய்மைவிளிச் சூத்திரத்திற்காணப் படுகின்ற 'உளவெனப்பட்ட எல்லாப்பெயரும்' என்றாற்போன்ற பொ துச் சொற்கள் இச்சூத்திரத்திற் காணுமாறில்லை. சூத்திர அமைதியே பொதுப்படவுளதாகலிற் பொதுவினை வெளிப்படக் கூறுஞ்சொற்கள் வேண்டா எனின், விளிமரபில் அங்ஙனமே யமைந்த பிறசூத்திரங் களுளவாகவும் அவை பொதுப்பட எழுந்தனவல்ல வெனற்கு அவ் விளிமரபின் கண்ணேயே சான்றுளவாம். உதாரணமாக 'முறைப் பெயர்க்கிளவியேயொடுவருமே' என்ற சூத்திரத்தை யெடுத்துக் கொள்க. இது பொதுப்பட வெழுந்த சூத்திரம்போலத் தோன்றுகிறது. இத்தோற்றரவு உண்மையாயின், இச்சூத்திரத்தாற் பெறப்படுவது யாதொன்றும் விளிமரபில் யாண்டும் வருதல் கூடாது. ஆனால் 'முறைப்

பெயர்க்கிளவி முறைப்பெயரியல' என்று ஒரு சூத்திரம் அவ்வியலுட் காணப்படுகின்றது. 'முறைப்பெயர்க்கிளவியே' என்ற சூத்திரத்தினைக் குறிப்பிட்ட வோரீறுபற்றி யெழுந்ததெனக் கொண்டாலன்றி மேற் காட்டியவாறு பிறிதொரு சூத்திரம்வருதற்கு நியாயங்கூறுதல் கூடாது. இதனால் அது பொதுச்சூத்திரமாகாமை அறியப்படும். ஆகவே சூத்திர அமைதி பொதுப்பட விருப்பினும், அதுபொதுவாதல் வியக்த வாசகத்தாற் கூறப்படவேண்டும். இங்ஙனம் ஆசிரியர் கூறிற்றிலர். ஆதலால் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரம் பொதுவெனக் கருதப்பட்டதென்பதை அறுதியாக வுணர்த்துதற்குரிய நிறப்புமுறையேனும், வியக்தவாசகமேனும் இன்மையால், அச்சூத் திரம் பொதுவாகாமை நன்குதேறப்படும்.

அன்றியும், பெயர்களைத்திணைபற்றி, ஈறுபற்றிவகுத்து விளிமரபு கூறுதலே தொல்காப்பியரது கருத்தாகும். ஏதானுமொருவிதி யாண் டும் அமைவுடைத்தாகி நிற்கும் போதும், அவ்விதியினுள் அடங்கிய வற்றைத் திணை, யீறு, முதலாயினபற்றிப் பிரித்து வேறுவேறு கூறிச் செல்கின்றனர். இதன் உண்மை கீழ்வரும் உதாரணங்களால் நன்கு விளங்கும். சுட்டு வினைப்பெயர்கள் விளியேலாவென்பது ஆசிரியரது முடிபு. அதனை யொரு பொதுச் சூத்திரத்தாற் கூறியொழியாது பல வேறு ஈற்றின்கீழ் நான்கு சூத்திரங்களில் (சூ-139, 144, 145, 150.) அமைத்திருக்கின்றார். அளபெடைப் பெயரைப்பற்றியுள்ள சூத்திரங் கள் தொல்காப்பியரது கருத்தை மிகச் செவ்விதிற் புலப்படுக்கின்றன. அளபெடைப் பெயர்களெல்லாம் எவ்வகைய ஈற்றினவாயினும் இயல் பாய் நின்று விளியாவனவாம். இதனை,

(1) அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப. சூ-127.

(2) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ 137.

(3) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ-143.

(4) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ-151.

இந்நான்கு சூத்திரங்களாற் கூறுகின்றார். இந்நான்கும் பொருளில் வேறுபடுவனவல்ல; இவற்றாற்போந்த விதியைப் பிரயோகிக்கும் இட மொன்றே வேறுபடுவது. இவற்றில் பின்மூன்று சூத்திரங்களும் ஒன்றுபோலமைந்துள்ளன. சூத்திரமொன்றின்கண்ணேயே அடக்கிக்கூறவியலும் விஷயத்தை ஒன்றுபோலமைந்த பலவேறு சூத்திரங்களாற் கூறுதலின் காரணம் யாது? தொல்காப்பியர் விளிமரபினை யெடுத்தோதுதற்குக் கைக்கொண்ட முறையொன்றே தக்ககாரணமாவது. அம்முறைதான் பெயர்களைத் திணைபற்றியும் ஈறுபற்றியும் வகுத்து அவை விளியேலுமாறு கூறுதலென்பது விளிமரபினை மனம் ஊன்றி வாசிப்பார்க்கு எளிதிற் புலனும். 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்றதனைப் பொதுப்பட வோதிய சூத்திரமெனக் கொள்வது மேலே தெளியப்பட்ட முறையொடு முற்று முரணுவதாகும். ஆதலால் இச்சூத்திரம் பொதுப்பட வெழுந்ததன்றாம்.

இதுகாறும் உரைகாரர்களது முடிபு இன்னதென்று வரைந்துகொண்டு தொல்காப்பியரது கருத்தும் அதுவேயாதல் வேண்டுமெனற்குச் சில நியாயங்கள் கூறினேன். பின்னூல்கள் பலவற்றுள்ளும் நேமிநாதம் ஒன்றே தொல்காப்பியத்தை முதனூலாகக்கொண்டு அதனன் னெறியினையே போற்றியுரைப்பது. இதன் உண்மை 'தொல்காப்பியக் கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்—பல்காற்கொண்டோடும் படகென்ப' என ஆன்றோர் சிறப்பித்துக் கூறியுள்ளதனானும் அறியப்படும். இதனுள்ளே,

"இகரம்ஈகாரமாம்;ஐயாயாம்;ஏயாம்
உகரஓகாரவுயிர்கள்;—பகர்விளிகள் *
அண்மையிடத்துமளபெடைப்பேர்க்கண்ணும்
உண்மையியல்பாயுறும்."

---

* 'பகர்விளிகள்' என்று இதிற் கூறியது இ, ஐ, உ, ஒ, இந்நான்கு உயிரீற்று விளிப்பெயர்களை.

என்று ஒரு வெண்பா காணப்படுகின்றது. 'அண்மைச் சொல்லே இயற்கையாகும் என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதன்கண் அடங்கும். உரையின் கண்ணேயும் இவை நான்கும் அணியாளைக் கூவுமிடத்து இயல்பாய் விளியேற்கும்' என்று கூறப்பட்டுளது. இதனால் ஈண்டு விபவகரிக்கப்பட்ட தொல்காப்பிய விளிமரபுச் சூத்திரம் இ, ஐ, உ, ஒ என்ற நான்கீற்றுப் பெயர்களுக்கு மட்டும் ஏற்புடையதொரு லக்ஷணமாகக் கருதப்பட்டமை தெளிவாம்.

ஆகவே, இளம்பூரணரையுள்ளிட்டோர் கூறியவுரையே பொருத்தமுடைத் தென்பது இனிது விளங்குகின்றது. 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற விளிமரபுச் சூத்திரம் னகரமெய்யீற்றுப் பெயராகிய 'கிழவோன்' இயற்கையாய் நின்று அண்மைவிளியில் வந்ததெனற்கு ஆதாரமாகாமை வெளிதிலறியக்கிடக்கின்றது. ஆதலால் தொல்காப்பியப்பேரிலக்கணம் நண்பரவர்களுடைய கருத்தை ஆதரிப்பதன்றெனல் நன்குணரலாகும்.

(தொடரும்)

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,

திருவனந்தபுரம்.

ஸ்ரீ

# முன்னதன்மறுதலைமுடிவு.

சென்ற சித்திரைமாதச் செந்தமிழ்ப்பகுதியில் 13-ம் புறப்பாட்டின்கணுள்ள விழுநீர்வேலிநாடுபெற்றி, திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் பி.ஏ., பி.எல்., எழுதிவிடுத்த ஒரு தலைமுடிவுக்கு மறுதலைமுடிவு மொருவாறுடன் விடுக்கப்பட்டது.

இப்பால் அப் பாட்டிலுள்ள கிழவோன் என்றசொல் விளிப்பெயராகமாட்டாதென்று நண்பரவர்கள் எழுதிய ஒருதலைமுடிவின் ஒரு பகுதி இதன்முன் வைக்கப்பட்டது. அதைமட்டும் மிதப்பாய்ப் படிப்பார்க்கு அதிற்சொல்லிய முடிவுகளெல்லாம் உண்மையென்று புலப்படும்படி வெகு சாதுர்யமாயும் தெளிவாயும் விரிவாயும் எழுதியிருக்கிறார்கள்.

கிழவோன் என்பது அண்மைவிளியாகுமென்பதை 'கடல்வண்ணன், அண்மைவிளி', "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்றதனால் மேலுங்கொள்க', என அடியார்க்குநல்லார் எழுதிய வலிய சாதனங்கொண்டு முன்னமே மாணவர் நன்கு நிரூபித்துவிட்டார். இனி அதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு மாணவர்க்கொருசிறிதுமில்லையாயிற்று. இதனை நன்குணர்ந்த நண்பரவர்கள் மாணவர்கட்கனுகூலமான அடியார்க்குநல்லார் கொள்கையே தவறென்று நிரூபித்துத் தம்கொள்கையை நிலைநாட்டவேண்டிய பொறுப்புடையவர்களாய் முதலில் அச்சூத்திரப்பொருளே மாணவர்கட்சிக்குவிரோதமாயிருக்கிறதென்று காட்டவேண்டி, (சொல்லதிகாரத்துக்கு உரையிட்ட சேனாவரையரும் பிறவுரையாளர்களும்) "இ உ ஐ ஓ என்ற நான்கிற்றண்மைக்கண் விளியேற்குஞ்சொற்கள் இயற்கையாய் விளியேற்கும்" என்றுரையெழுதியிருப்பதாகக் காட்டுகிறார்கள். இவர்கள் காட்டுகிறபடி 'இ உ ஐ ஓ என்ற' என்னும் ஏழு அக்ஷரங்களும் ஒருவருரையிலுமிதுவரை யெழுதப்படவில்லை. நச்சினார்க்கினியருரையில் "நான்கீற்றண்மைக்கண்விளியேற்கும் சொற்கள் இயல்பாய் விளியேற்கும்" எனவும், சேனாவரையருரையில், "நான்கீற்றண்மைச்சொல்லும் இயல்பாய் விளியேற்கும்" எனவும், இளம்பூரணருரையுள் "அணியாரைக்கூவு

மிடத்து அவையியல்பாய் விளியேற்கும்" எனவும் பொதுப்படவெழுதப் பட்டுள்ளன. இதனை அவ்வுரைகளின் ஏட்டுப்பிரதிகளையும் நண்பாவர்கள் கீழ்க்குறிப்பிற்காட்டியிருக்கும் இளம்பூரணருரைவாக்கியங்களையும் உற்றுநோக்கினுல் நன்கறியலாம்.

இப்படி ஒருரையிலும் இல்லாத " இ உ ஐ ஓ என்ற " என்னும் அடைமொழியை நான்கிற்றுக்கு நண்பாவர்கள் தாமே கூட்டி எழுதிக் கொண்டிருப்பதானது, அவ்வடைமொழி யில்லாவிடின் அவ்வுரைகளுள் ஒன்றும் தம் கக்ஷிக்குச்சிறிதும் அநுகூலமாகமாட்டாதென்பதையும், மாணவர்கட்சிக்கே பெரிதும் அநுகூலமாகுமென்பதையும் நண்பரவர்களே நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்களென வெளியாக்குகின்றது. பிறருமதனையறிந்துகொள்ளும்படி இங்குச் சிறிது, கூறுகின்றேன்.

உயிரீற்றண்மை விளிக்கே இச்சூத்திரம் உரித்தாமென்பது உரைகாரர்களுக்கெல்லாம் கருத்தாயின் நண்பரவர்கள்போலவே அவர்களும் " இ உ ஐ ஓ என்ற " என்னும் அடைமொழியை நான்கிற்றுக்குக் கொடுத்து விரித்தெழுதியிருக்கவேண்டும். அங்ஙனம் ஒருவரேனு மெழுதாமையால், இச்சூத்திரத்தின் சிங்கநோக்கு நிலையாலும், முன்மொழிந்துகோடல், பின்னதுநிறுத்தல், எதிரதுபோற்றல் என்னும் உத்திவகையாலும்முன்னும்பின்னுமுள்ள இருவகைநான்கீற்றுச்சொற்களும் அண்மையி லியல்பாய் விளியேற்குமென்பதே உரைகாரர்கள் கருத்தென நன்கறியலாகும்.

சூத்திரங்களுள் முன்னும் பின்னுமாகிய இருதலையும்பற்றிநிற்கும் சிங்கநோக்குக்கிலக்காகாதவிடங்களில்மட்டும் ஒருதலைபற்றிய ஆற்றொழுக்குக் கொள்ளத்தகும். சிங்கநோக்குள்ளவிடத்துள்ள ஆற்றொழுக்கு அச்சிங்கநோக்கால்விழுங்கப்பட்டு அதற்கு அங்கமாய்விடுதலால் அச்சிங்கநோக்கை வெல்லுந்திறனின்றி யிறந்துபடுவதாம். ஆகையால் இங்குச் சிங்கநோக்குப்பற்றியே இருவகை நான்கீறும் பொருளாகக்கொள்ளத்தகும்.

இங்குச் சிங்கநோக்குண்டென்று உரைகாரரொருவருமெழுதவில்லையென்பது கடாவன்று; ஏனெனில் [illegible] என்ற நியாயத்தால், பிறவிடங்களிற்சொல்லியிருப்பதுகொண்டு

கொள்ளத்தகுமென்று, மாணாக்கர்க்கறிவுவளர்தற்பொருட்டுய்த்துணர வைத்துச் சொல்லுத லுரைகாரர்க்கெல்லா மியல்பாதலால் உரைகாரரெழுதாதது தவறாகாது. அன்றியு மிச்சூத்திரம் சிங்கநோக்குடைய தென்பதற்கு உரைகாரர்களெல்லாரும் தக்ககுறிப்புக்காட்டியிருக்கிறார்கள். எப்படியெனில் இச்சூத்திரத்துக்கு முன்னும் பின்னும் ஒருதலை பற்றி ஆற்றொழுக்குள்ள "ஏனையுயிரே" 'ஏனைப்புள்ளி' என்னும் சூத்திரவுரைகளிலும், பிறசூத்திரவுரைகளிலும் நான்கீற்றை யுரைக்குமிடத்து "மேற்கூறப்பட்டநான்கீறு" என்றும், "அந்நான்குமல்லாத புள்ளியீறு" என்றும் நான்கீற்றை விதந்தோதியவர் இடைநின்ற இச்சூத்திரம் உயிர்க்கேயுரியதாயின் முன்கூறியவாறே "மேற்கூறப்பட்ட நான்கீற்று அண்மைச்சொல் எனவிதந்துகூறவேண்டும். அங்ஙனம் ஒருவரும் முறைப்படக்கூறாதுபொதுப்பட நான்கீறென்றே கூறினமையால் இது இருவகை நான்கீற்றுக்கும் பொதுவேயாமென்றறியத்தக்கது.

மேற்கூறப்பட்டநான்கீறு என்றெழுதினாலும் அல்லது நண்பரவர்கள் காட்டியபடி "இ உ ஐ ஓ என்ற" நான்கீறென்றெழுதினாலும் மெய்யீற்றுச்சொற்களுக்கு அண்மைவிளி யில்லையென் றொழிந்துவிடுமென்றேகருதி அங்ஙனமொழியாது இருவகை நான்கீற்றுக்கும் பொதுவாகவேண்டுமென்றே எல்லாரு மெழுதினாரெனவறிக.

ஆனால் மெய்யீற்றண்மைவிளி யொன்றற்கேனும் அச்சூத்திரவுரையி லுதாரணங்காட்டாமையா லுயிரீற்றுக்கே உரியதாமென்று சொல்லுதல் கூடாது. ஏனெனில், ஒருவகைக்குக்காட்டியதனானே பிறிதொருவகையியல்பும் எளிதாயறிந்துகொள்ளக்கூடுமென்று விட்டுவிட்டது குறையாகாது. உயிரீற்றுள்ளும் இளம்பூரணர் ஒன்றற்குதாரணங் காட்டவில்லை. 'ஏனைப்புள்ளி' என்ற சூத்திரவுரையில் சேனாவரையர், நச்சினார்க்கினியர்காட்டும் பலவுதாரணங்களும் காட்டினாரில்லை. அதனாலவைகொள்ளற்கவென்னலாகாதவாறே இதனாலிவை கொள்ளற்கவென்ன லாகாதெனவறிக. இக்குறிப்பால், உயிரீற்றுக்கே உரியதென்று சாதிக்குங் குறிப்பொழிதலால் இச்சூத்திரம் மெய்யீற்றுக் குரியதன்றென்று நிரூபித்தற்கேலாதாயிற்று.

இவ்வாறிச்சூத்திரத்தான் மெய்யீற்றண்மைவிளியுமுடன்கொள்ள விசையாத நண்பரவர்கள் 'மெய்யீற்றண்மைவிளியே யில்லையென்று

சொல்லிவிட வியலாதென நினைந்து அதற்கும் விதி தொல்காப்பியத் துண்டென்றுகாட்டக்கருதி, 'ஏனைப்புள்ளியி றுவிளிகொள்ளா" வென்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர்காட்டிய நம்பன் என்னும் இயல்பு விளியை னகரவீற்றண்மைவிளியாக ஆரோபித்துக்கொண்டு அச்சூத் திரத்தால் மெய்யீற்றண்மைவிளி யமைக்கப்பட்டிருப்பதாகக் காட்ட வருகிறார்கள். இதனால், இயல்புவிளியு மண்மைவிளியுமொன்றேயா மென்று அவர்கள் கருதியதாகத் தெரிகிறது. அங்ஙனமாயின் "ஆனெ னிறுதி யியற்கையாகும்" "அயனெடிதாயி னியற்கையாகும்" என்ற சூத்திரங்களால் விதிக்கப்பட்ட வியற்கைவிளியும் அண்மைவிளியாக வேண்டுமே? அன்றியும் 'அண்மைச்சொல்லிற் ககரமாகும்' என்றசூத் திரத்தால் இயல்பாகர்த விகாரவிளியும் அண்மைவிளியன்றாயொழிய வேண்டுமே? அங்ஙனமில்லாமையால் இயல்புவிளியெல்லாம் அண்மை விளியென்றும், அண்மைவிளியெல்லாம் இயல்புவிளியென்றும் கொள்ள லாகாதென வறியத்தக்கது.

ஒருவாறு நம்பன் என்றுகாட்டிய இயல்புவிளியையே அண்மை விளியென்று வைத்துக்கொண்டாலும் அதனால் மாணவர்கக்ஷிக்கொரு பாதகமு முண்டாய்விடமாட்டாது. ஏனெனில் அவர்கக்ஷிக்கு மெய் யீற்றண்மையியல்புவிளியுண்டென்பதுமட்டும் வேண்டுமேயல்லதுஅது "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்ற சூத்திரத்தாலேயே வந் ததாகவேண்டுமென்னும் ஆவசியக மொன்றுமில்லை. "ஏனைப்புள்ளி" என்ற சூத்திரத்தால் வந்தாலும் இஷ்டசித்தியுண்டாகத் தடையில்லை.

ஆதலால் இவ்விஷயத்தில் நண்பரவர்கள் செய்யும் வாதமெல்லாம் அடியார்க்குநல்லாரை நோக்கியெழுந்ததாகுமே யல்லது மாணவரை நோக்கியதாகமாட்டாது. இவ்விஷயத்தில் அடியார்க்குநல்லார்கட்சி தோல்வியுற்றாலும் மாணவர்கட்சி தோல்வியுற்றதாகமாட்டாது.

இனி அடியார்க்குநல்லார்கொள்கையில் நண்பரவர்கள் சொல் லும் குறைபாடென்னவென்று பார்ப்போம்.

முதலாவது தொல்காப்பியர், இளம்பூரணர், சேனாவரையர், நச் சினார்க்கினியர் முதலிய இலக்கணப்புலவர் கொள்கைக்கு அடியார்க்கு நல்லார் கொள்கை மெய்யீற்றண்மைவிளிவிடயத்தில் முற்றும் விருத்த மாமென்பது.

2. அடியார்க்குநல்லார் தொல்காப்பியத்துக்கு உரையெழுதாது சிலப்பதிகாரத்திற்கே யுரையெழுதியிருப்பதால் சிலப்பதிகாரக்கதையொன்றைமட்டும் அவர் நன்குதெரிந்தவராவரேயல்லது தொல்காப்பியச்சூத்திரப்பொருள்களை யூன்றியறிந்தவுணர்வுடையராகாரென்பது.

3. தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவர்களே அச்சூத்திரப் பொருள்களை யூன்றியறிந்த வுணர்வுடையராவராதலால் அவர்கள் சொல்லியவற்றையே பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்பது.

இவற்றை நிரூபிக்கவேண்டி அவர்கள் காட்டும் விஷயங்கள் பலவுள. அவற்றுள் ஒன்றேனும் நண்பரவர்கள் கொள்கையை நிரூபிக்க வல்லதாவெனப் பின்பு ஆராய்வோம். முதலில் அடியார்க்குநல்லார் தகுதியை இங்கு ஆராய்வோம்.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவரல்லது பிறரொருவரும் தொல்காப்பியத்திலக்கணந் தெரிந்தவராகமாட்டார் என்பது சித்தாந்தமானால் பரிமேலழகர் முதலிய வுரையாசிரியர் பலரும் எழுதியவிலக்கணங்களெல்லாம் பயனற்றனவா யொழியவேண்டும். அவ்வாறில்லாமையாலும், தொல்காப்பிய நூலாலுமுரையாலு மறியப்படாத சில நுணுகிய விலக்கணங்களு மகப்படப் பரிபாடன்முதலிய சங்கநூலுரைகளிற் பரிமேலழகர்முதலிய உரையாசிரியர் பலருமெழுதிச்செல்வதால் அவ்வுரையாசிரியர்கள் தொல்காப்பிய நூலிலும் உரையிலும் சொல்லப்பட்ட விலக்கணங்களை முற்றக்கற்றுணர்ந்திருப்பதுமன்றி அவற்றிலில்லாத பிறவிலக்கணங்களையு மவரறிந்தவரென விளங்குதலால் அவர் தொல்காப்பிய வுரையாசிரியர்களினின்றும் இலக்கணவுணர்ச்சியிற் சிறிது தாழ்ந்தவரெனச் சொல்லலியலாது.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவரேயன்றி அவரெழுதிய அவ்வுரைகளை நன்கு கற்றவர்களும் அவ்வுரையாசிரியர் கருத்தினையறியாரென்ன லியலாது. அடியார்க்குநல்லார் தொல்காப்பியங்கல்லாதவரென்று சொல்லலு மியலாது.

ஏனெனில், "................பொப்பண்ணகாங்கயர்கோனளித்த, சோற்றுச்செருக்கல்லவோதமிழ்மூன்றுரைசொல்வித்ததே" என்ற பாசுரத்தால் பொப்பண்ணதேவனென்னும் ஒருதாரபுருஷனாலே சம்ரக்ஷிக்கப்பெற்றிருந்துகொண்டு இயலிசை நாடகமென்னும், முத்தமி

ழிலக்கணங்களாலும் இச் சிலப்பதிகாரவுரையைச் செய்தேன் என்று அவர் தாமே சொல்லியிருக்கிறார். இதனாலும் இன்னும் அவர் அவ் வுரையுட்காட்டிய மேற்கோள் பலவற்றாலும் முத்தமிழிலக்கணங்களையு மொருங்கு கற்றே அச்சிலப்பதிகாரவுரையை எழுதியுள்ளார் என்பது தெற்றெனை வெளியாகின்றது.

ஆதலால் அவர் இயற்றமிழிலக்கணவகையாகிய தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையுங் கல்லாதவரெனக்கூறுறுவது உலகங்கொள்ளா தெனவே கொள்ளத்தக்கதாம். ஆகவே அவர் தொல்காப்பியவிலக் கணங்கற்றே "கடல்வண்ணன் அண்மைவிளி" "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்றதனால் மேலுங்கொள்க" எனவெழுதிய விலக் கணம் தொல்காப்பிய நூலுக்கேனும் உரைக்கேனும் ஒருசிறிதும் விரோதிக்கமாட்டாதென்றே தோன்றுகிறது. நண்பரவர்கள் விரோ திப்பதாகவே கருதுகிறார்கள். இதனுண்மையை யாரை விசாரித்தறிய லாம்? அவ் வடியார்க்குநல்லாரையும் நச்சினார்க்கினியரையுமே விசா ரித்தறியவேண்டும்.

ஆதலால் முதலில் அடியார்க்குநல்லாரையே விசாரிப்போம்.

வினா. சிலப்பதிகாரவுரையில் 'கடல்வண்ணன் அண்மைவிளி' "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்றதனால் மேலுங் கொள்க, வென்றெழுதியது எதற்காக?

விடை. கடல்வண்ணன் என்றபெயர் 'அன்னென்னிறுதியாவாகும் மே" என்ற சூத்திரத்தால் கடல்வண்ணாவென்றன்றோ விளியேற்கவேண்டும்? அங்ஙனமன்றி, கடல்வண்ணன் என இயல்பாதற்கிலக்கணம் யாதோவென மாணவர்க்கையநிகழு மாதலால் அதனை நீக்குதற்பொருட்டேயாம்.

வினா. அண்மைவிளியென்றலென்ன?

விடை. அண்மையிலுள்ளாரையழைத்தல்.

வினா. அண்மையாவதியாது?

விடை. சிலர் அந்தரங்கத்தில் அபிமுகமாயிருந்துபேசும்பேச்சொலி கேட்கும் இடக்கிடக்கை.

வினா. இங்கு விளிக்கப்பட்ட கடல்வண்ணன் யாவன்? அவன் எங்குள்ளவன்?

விடை. அவன் கண்ணபிரான். கோகுலத்துள்ளவன்.

வினா. இவ்வாய்ச்சியர் குரவைக்கூத்தாடிய இடம் யாது?

விடை. தென்மதுரையிலுள்ள விடையர்தெரு.

வினா. கோகுலத்துக்கும் தென்மதுரைக்கும், எத்துணை தூரம்! இடையே பலநூற்றுக்காவதங்களுண்டே! இங்கு அண்மை விளியாமென்பதே அசம்பாவிதமில்லையா? (தந்தியால்விளிக்கவும் சமகாலமில்லையே).

விடை. அப்படியன்று; கண்ணபிரான்முன்னின்றே கோகுலத்தில் இடைப்பெண்களாடிய குரவைக்கூத்தின் அநுகாரமாகவே தென்மதுரையிடைப்பெண்க ளாடினமையால் அங்குள்ள அண்மைவிளியையே இங்கு மநுகரித்துக்காட்டவேண்டு மாதலால் அது தவறாகமாட்டாது.

வினா. "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்ற சூத்திரம் உயர்திணை யுயிரீற்றுப்பெயர்களுக்கே உரியதில்லையா?

விடை. அப்படி சூத்திரத்துட்சொல்லவுமில்லை. உரையாளர்க ளொருவரும் எழுதவுமில்லை. போதகாசிரியர் பாடம் சொல்லவுமில்லை.

வினா. வேறெப்படியுள்ளது?

விடை. அச்சூத்திரம் உயிரீற்றுவிளிக்கும் மெய்யீற்றுவிளிக்கும் இடையே சிங்கநோக்காயுள்ளது; உயிரீறு என்றேனும் மெய்யீறென்றேனும் விதந்தோதாது அவ்விருவகையீற்றுக் கும் பொதுப்பட "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்றே கூறுகின்றது. அதற்குரைவகுத்த உரையாசிரிய ரும், 'அணியாரைக்கூவுமிடத்து அவை இயல்பாய்விளியேற் கு' மென்று பொதுப்படக்கூறியுள்ளார். சேனாவரையரும் "நான்கீற் றண்மைச்சொல்லு மியல்பாய் விளியேற்கும்" என்றே பொதுப்பட எழுதியுள்ளார். அம்முறைபற்றியே

நச்சினார்க்கினியரும், "நான்கீற்றன்மைக்கண் விளியேற் குஞ் சொற்கள் இயல்பாய்விளியேற்கு" மென்றே பொதுப் படக்கூறியுள்ளார். ஆதலால் அது மெய்யீற்றன்மைச் சொல்லுக்குமிலக்கணமா மென்பதில் விரோதமொன்று மில்லை.

வினா. மெய்யீற் றன்மைச்சொல்லுக்கு முரியதென்று நிரூபிக்க முடியுமா?

விடை. முடியும்; ஆனால் அவ்வாறு நிரூபிக்கவேண்டியபொறுப்பு இத்தலைக்கில்லை. மெய்யீற்றன்மைச்சொல்லுக்கு முரிய தென்பதில் விரோதமுண்டென்று காட்டினால் அதனைப் பரி கரிக்கவேண்டிய பொறுப்பொன்றே இத்தலைக்குரியது. விரோதமுண்டென்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பும், பிறி தொருசூத்திரத்தால் மெய்யீற்றன்மைவிளி பெறப்படு மென்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பும் அத்தலைக்குரியன. முதலில் அந்நிரூபணத்திற்கு அத்தலைக்குச் சிறந்தசான்றா கச்சொல்லப்பட்ட நச்சினார்க்கினியரை விசாரித்தால், அது கொண்டே விரோதமில்லையெனத் தெளியப்பட்டு மெய்யீற் றன்மைச்சொல்லுக்கு முரியதென்பது நிரூபிக்கப்பட்ட தாய்முடியுமாதலா லவரையே விசாரிக்கலாம்.

(இனி நச்சினார்க்கினியரை விசாரிப்போம்).

வினா. அண்மைச்சொல்லேயியற்கையாகும் என்ற சூத்திரம் என் னுதலிற்று?

விடை. எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தது.

வினா. எய்தியது யாது?

விடை. அண்மைப்பொருளல்லாத விளிமாத்திரத்தில் எய்தக்கடவ தாய் முன்னும் பின்னும் உயர்திணைக்கண் விதிக்கப்பட்ட விகாரவகை பலவுமாம்.

வினா. இங்கு எய்தியது என்ற இறந்தகாலக் குறிப்பால் முற்சூத் திரங்களால் விதிக்கப்பட்ட உயிரீற்று விகாரவிதிகளென்று ஏன் பொருள் கொள்ளக்கூடாது?

விடை. அங்ஙனங்கொள்ளின் இனிமேல் விதிக்கப்படும் மெய்யீற்று விதிகளெல்லாம் எய்தும் விதிகளெனவேண்டும். வேண்டவே அவ்விருகூற்றுக்கு மிடைநிகழு மிச் சூத்திரவிதி எய்துகின்ற விதியெனல்வேண்டுமாதலா லிதனைப் பிறிதுவிதி வகுக்கின்றது என நிகழ்காலக்குறிப்பாற் கூறுவதேமுறையாகும். அங்ஙனங்கூறாது பிறிதுவிதி வகுத்ததுஎன இறந்தகாலத்தாற் கூறுதல் முறையின்றாம். அன்றியும் இங்கு எய்தியது என்ற வினைக்குறிப்பிற்கு, விலக்கிற்று என்ற தொழிற்குறிப்பால் இறந்தகாலப்பொருள் பொருந்துவதின்று; நிகழ்காலப்பொருளே பொருந்துவதாம். ஏனெனில், யாண்டும் விலக்குதல் வருமுன்னர்க்காத்தலேயாகும். வந்தபின்பு விலக்குதல் சம்பாவிதமன்று; அது போக்குதலாம். இங்கு எய்தியது போக்கியென்னாது விலக்கி என்றமையால் எய்துதலும் விலக்குதலும் ஏககாலமுடையவாயிருத்தலால் எய்தியதென்பதற்கு இறந்தகாலப்பொருள் கொள்ளாது, முன்னும் பின்னு முள்ள சூத்திரங்கள் பலவற்றாலும் விளிமாத்திரத்தி லெய்தக்கடவனவாயுள்ள விகாரங்களையென்றே பொருள்கொள்ளவேண்டும். விலக்கி வகுத்தது என்பது ஓடிவந்தானென்பதுபோலு முடனிகழ்வினையாம். வகுத்தது என்ற இறந்தகாலம் உரையெழுதுவதற்கு முற்பட்டு நூன்முடிந்து சூத்திரங்க ளாணைசெலுத்தத் தொடங்கியகாலம். இங்ஙனம் முன்னும் பின்னுமுள்ள இலக்கணங்களுக்கெல்லாம் நிமித்தமுள்ளவிடத்து சமகாலப் பிரவர்த்தியுண்டென்பதை வியாகரணம் வல்லார்வாய்க் கேட்டறியலாம். ஆதலால் எய்தியதென்றது பாதகமாக மாட்டாது. அன்றியும் எய்தியதென்பதைப் பொதுப்படக் கொள்ளாது மேற்சொல்லப்பட்ட விதியையே கொள்வதாயின், "முறைப்பெயர்மருங்கினையெனிறுதி, யாவொடுவருதற்

குரியவுமுளவே" என்ற சூத்திரத்தால் முறைப்பெயர்களுக்கு விதிக்கப்பட்ட விகாரவிதியைமட்டும் விலக்கி அப்பெயர்களுக்கே அண்மைப்பொருளில் இயல்பு விதித்ததாய் முடிந்து உயிரீற்றண்மைக்கே பொதுவிதியாகாது விரோதிப்பதாகும். அன்றியும், ஏனைப்புள்ளியென்னும் சூத்திரத்தின் உரையாசிரியருரையில் எய்தியது என்பதன் எதிர்மறைச்சொல்லாகியஎய்தாததென்னும் சொற்பொருள், முன்னும் பின்னும் விளிமரபிலுள்ள சூத்திரவிதிகளுள் ஒன்றானும் எய்தாததென்றே தெளியக்கிடப்பது காண்க. இங்ஙனங் கொள்ளாக்கால் அத்தலைக்கருத்துப்படி முன் சூத்திரங்களாலெய்தாத தெய்துவித்ததாகவேண்டும். வேண்டவே மெய்யீற்று விளியெல்லாம் முன்னமே விதிக்கப்பட்டதாகவும், அவற்றின் வேறுயவிதியே இச்சூத்திரத்தால்விதிக்கப்பட்டதாகவும் கொள்ளல்வேண்டும். அங்ஙனங்கொள்ளலாகாதாதலால், எய்தியதென்பதற்கு ஏற்புழிக்கோடலாற் பெரும்பானும் முன்சூத்திரங்களாலெய்திய விதியே பொருளாமாயினும், ஒரோவழி மேல்வரும் சூத்திரங்களால் எய்தற்குரிய விதியும் பொருளாமெனவறிக.

வினா. எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது என்றெழுதுவது முறையாகாதோ?

விடை. அதுவும் ஒருவகையால் முறையேயாம். ஆனால் அங்கும் எய்திய தென்பதற்கு எய்தக்கடவதென்றே பொருள் கொள்ள வேண்டும். வகுக்கின்றதென்ற நிகழ்காலம் சூத்திரம் ஆணை செலுத்திநிற்கும் நிகழ்ச்சியை நோக்கியதாக வேண்டும். அல்லாக்கால் 'தநநுஎ' என்ற சூத்திரத்தால் விளியேலாதென விலக்கிய தம்முன், நம்பன் என்பன "ஏனைப்புள்ளியீறு" என்னுஞ்சூத்திரத்தாலமைத்தவியலாதெனவறிக.

வினா. ஆயின் (செவ்வனே) 'எய்துகின்றதுவிலக்கி' யென்னாது எய்தியது விலக்கி என விறந்தகாலத்தாற் கூறுவதிற் பயனென்ன?

விடை. விலக்காதொழியில் எய்துவதொருதலை யென்னும் தேற்றப் பொருளுணர்த்தல் பயனுபிற்று. இதனை 'இம்மருத்துவன் செத்தவனை யுயிர்ப்பித்தான்' என்னும் வழக்காலறிக. இங்கு இம்மருத்துவன் வந்து உயிர்ப்பியாவழி அவ்வுயிர்ப்பிக்கப் பட்டானிறப்பது ஒருதலை யென்பதே பொருளாதல் நன்கறியலாம்.

வினா. அண்மைச்சொல் லென்பதற் கெவ்வாறு உரை யெழுதப் பட்டிருக்கிறது?

விடை. நான்கிற்றண்மைக்கண் விளியேற்கும் சொற்களென்றெழுதப்பட்டிருக்கிறது

வினா. நான்கிற்றண்மைச் சொற்களென்ற தெவற்றை?

விடை. முன்மொழிந்துகோடலாற் பெறப்பட்ட நான்குயிரீற்றண்மைச் சொற்களும், பின்னதுநிறுத்தலாற் பெறப்பட்ட நான்கு மெய்யீற்றண்மைச் சொற்களுமே.

வினா. அவ்விருவகையும் சேர்ந்தால் எட்டீற்றண்மைச் சொற்களாக வேண்டுமவற்றை நான்கிற்றண்மைச் சொற்கள் என்பது எவ்வாறு பொருந்தும்?

விடை. நான்கிற்றண்மைச் சொல்லென்றது எண்ணடுத்த சினையால் விசேடிக்கப்பட்ட அண்மைச்சொல்லென்னும் ஒரு தொகுதிப் பெயராதலால், அத்தொகுதி யிரட்டித்த பன்மையை நான்கிற்றண்மைச்சொற்கள் என வழங்குதல் தவறாகாது.

வினா. மேலே கூறியவிடை திருப்திகரமாயில்லையே அதற்குத் தெளிவான உதாரணங் காட்டக் கூடுமா?

விடை. இருசீரடி, மூவசைச்சீர், நான்மணிமாலை, ஐந்தலைநாகம் அறுசீர்க்கழிநெடிலடி, எழுகூற்றிருக்கை முதலிய எண்ணடுத்த சினைமுதற் பொருளொவ்வொன்று மிரட்டித்தபன்மையில், அச்சினைகளில் வருணபேதமிருப்பினும், முறையே அவை, இருசீரடிகள், மூவசைச்சீர்கள், நான்மணிமாலைகள் ஐந்தலைநாகங்கள் என்றற்றொடக்கத்தனவாய் எண்ணிரட்டாமலே பன்மைப் பெயரால் வழங்குவதுபோல நான்கீற்றண்மைச் சொற்றொகுதியுள்ளும் உயிரும் மெய்யுமாகிய வருணபேத மிருப்பினும். அத்தொகுதி இரண்டு கூடிய கூட்டத்தை எட்டீற்றண்மைச்சொலென்னாது நான்கீற்றண்மைச் சொற்களெனப் பன்மைச்சொல்லால் வழங்கத் தகுமென அறிக. அன்றேல் மூவசைச்சீரிரண்டு கூடிய பன்மையை மூவசைச் சீர்கள் என்னாது அசைவேற்றுமை பற்றி ஆறசைச்சீரென்னல்வேண்டும். ஐந்தலைநாகமிரண்டு கூடியதொகுதியைப் பதுத்தலைநாகமெனல்வேண்டும். அங்ஙனம் வழங்குதலின்மையால், நான்கீற்றண்மைச்சொற்கள் என்பதற்கு உயிரும் மெய்யுமாகிய இருவகை நான்கீற்றண்மைச் சொல்லும் பொருளாமென அறிக.

வினா. நான்கீற்றண்மைச்சொல் என்றதற்கு மேற்கூறிய நான்குயிரீற்றண்மைச்சொல் என்று பொருள்கொள்ளலாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில், பொதுப்பட வழங்கிய சொல்லாற்றலுக்குத் தடையுள்ள விடங்களில் மாத்திரம் சிறப்புப்பொருள் கொள்ளுதல் முறையாகும்; ஒரு தடையுமில்லாத விடத்திற் சொல்லாற்றல் வலிமையாற் பொதுப்பொருளே உணர்த்தப்படும்.

வினா. சொல்லாற்றலுக்குத் தடையெது?

விடை. இனம் விலக்கி நிற்கும் அடைமொழிகளும் பிறசார்பு முத லியனவும் ஆம்.

வினு. அண்மைச்சொல் என்றதற்கு நான்கீற்று அண்மைச்சொல் என என் அடைகொடுத்து விசேடிக்கவேண்டும்?

விடை. எல்லாவீற்றினும் அண்மைவிளி யுண்டென்று மயங்காமைப் பொருட்டே முன்னும் பின்னுமுள்ள நான்கீற்றை யதிகரித் துக் கூறியவாறு.

வினு. நான்குயிரீற்றண்மைச்சொல் என்று உரையெழுதப்பட்டி ருந்து பின் ஏடெழுதுவோரால் நான்கீற்றண்மைச்சொல் என வழூப்பட எழுதப்பட்டிருக்கலாகாதா?

விடை. அப்படி யெழுதப்பட்டிருந்தால் ஒருசில வேடுகளிலேனும் ஒருசில பதிப்புக்களிலேனும் வேறுபாடம் காணப்படவேண் டும்; அன்றியும் சேனாவரையத்திலாயினும் பொதுமையி னெழுதப்படாதிருக்க வேண்டும். அங்ஙன மில்லாமையா னும், உரையாசிரியருரையும் பொதுவாகவே யிருப்பதாலும் நான்கீற்றண்மைச்சொல் என்ற பாடமே சுத்தபாடமா மென அறியத்தக்கது.

வினு. ஆயின் உதாரணங்களெல்லாம் உயிரீற்றுக்கே காட்டி மெய் யீற்றுக்குமட்டும் காட்டாது விட்டதென்ன?

விடை. உதாரணங்களெல்லாம் சிறிதும் விகாரமின்றி எல்லாரானு மெளிதினறியப்பட்ட பெயர் வடிவாகிய வியல்பு ஒன்றே யாதலால் ஒருவகைக்குக் காட்டியது கொண்டே பிறிதொரு வகையு மெளிதினுணரத்தக்க தென்று, விடப்பட்டதன்றி வேறன்று, ஆதலால் அது விரோதமாக மாட்டாது.

வினு. ஏனைப்புள்ளியீறு என்னுஞ் சூத்திரம் என்னுதலிற்று?

விடை. வேண்டாகூறிவேண்டியது முடித்தது.

வினு. வேண்டாகூறலாவதென்ன?

விடை. "ஞரலள வென்னுமப்பானுன்கே புள்ளியிறுதி விளிகொள் பெயரே" என்ற சூத்திரத்தில் ஞரலள என்னுமெடுத்தோதத் தாலும் நான்கு என்னும் எண்ணாலும் அந்நான்கு மல்லாத புள்ளியிறு விளிகொள்ளாவென்பது பெறப்பட்டிருக்கவும், (மறித்தும்) "ஏனைப்புள்ளியிறு விளிகொள்ளா" என்றசூத் திரம் வேண்டா கூறலாயிற்று.

வினா. வேண்டியது முடித்தலாவதென்ன ?

விடை- ஒரு சூத்திரத்தாலெடுத்தோதற் கெளியவா யொருநெறிப் படுதலின்றியே, முன்னும் பின்னும் கூறிய இலக்கணங்களி லடங்காது பிறழ்ந்து, ஒரு சில இலக்கணப்போலியும், வேறு சில வழூவமைதியுமாய், எய்தியதுவிலக்கல் எய்தியது இகந்து படாதுகாத்தல் எய்தாததெய்துவித்தல் முதலிய பலவேறு நெறிபற்றி நிற்கும் ஒரு சில இலக்கியங்களை வழக்குநோக்கி அகதிககதியாயமைத்துக்கொள்ளுதலாம். (அஃதாவது இங் குக்கூறப்பட்டபுள்ளியிறு பிறவாற்றான் விளிகொள்ளுதலும் ஏனைப்புள்ளியிறு விளிகொள்ளுதலும் கொள்ளத்தகுமென்ப தாம்.

வினா. பிறவாற்றால் விளிகொள்ளலாவதென்ன ?

விடை. கூறப்பட்டபுள்ளியிற்றுச்சொற்களுக்கு விளிமரபிற் கூறி யுள்ள விளியேற்குமாறு இலக்கணநெறியாமாதலால், அத னிற் பிறவாமாறு இலக்கணப்போலியும் வழூவமைதியு முத லிய நெறிவேறுபாட்டால் விளிகொள்ளுதலாம்,

வினா. மெய்யீற்றண்மைவிளியு மிதனுளமையாதா ?

விடை. அமையாது: ஏனென்றால் அது அண்மைச்சொல்லே இயற் கையாகும் என்ற சூத்திரத்தால் எளிதில் எடுத்தோதி விதித் தற்கேற்றவாறு ஒரு நெறிப்பட்டதும், சார்வத்திரிகமுமா மாதலால் அஃதெடுத்தோதியேவிதிக்கற்பாலது. அன்றியும்

அதன் ஒரு பகுதியாகிய னகாரவீறும் 'அண்மைச்சொல்லிற் ககர மாகும்' என்றெடுத்தோதியே விகற்பவிதி விதிக்கப்பட்டிருக்கிறது; மெய்யீற்றோடொத்த உயிரீறும் எடுத்தோதியே ஸார்வத்திரிகமாய் அண்மைவிளி விதிக்கப்பட்டதென் றிருதலைக்கு முடம்பாடாயிருக்கிறது. இங்ஙனமுன்னும் பின்னுமெடுத்தோதத்தால் அண்மைவிளி விதிக்கப்பட்டிருக்க இடைநின்ற நான்கு மெய்யீற்றுக்குமட்டும் எடுத்தோதாதிச் சூத்திரத்திலேசினாலண்மைவிளி விதிக்கப்பட்டதென்பது நெறிப்பாடுடையதின்றாம். இலேசினாலமைப்பன வேறுகதியற்றவா யருகிவருமிலக்கியவகைகளேயாம். அன்றியும் இச் சூத்திரத்தால் மெய்யீற்றண்மையையுமமைப்பதே தொல்காப்பியர் கருத்தாயின் இதனோடொத்த ஏனையுயிரே என்ற சூத்திரத்துள் உயிரீற்றண்மைவிளியுமிதுபோலமையக்கிடத்தலால், அண்மைச்சொல்லே யியற்கையாகும் என்ற சூத்திரம் வகுத்ததே பயனின்றாய் முடியும். ஆதலால் மெய்யீற்றண்மை விளியை 'ஏனைப்புள்ளியீறுவிளி கோள்ளா' என்ற சூத்திரத்தாலாசிரியரமைத்திருப்பர்என்று கருதுவது சிறிதும் பொருந்தாததென்றறியத் தக்கது.

வினா. ஆனால் 'ஏனைப்புள்ளியீறுவிளிகோள்ளா' என்ற சூத்திரவுரையில் உதாரணமாகக் காட்டப்பட்ட விளியுள் ஒன்றேனும் மெய்யீற்றண்மைவிளியில்லையா?

விடை. உண்டு; அவை 'அண்மைச்சொல்லேயியற்கையாகும்' என்ற சூத்திரத்தாலும் பிறவாற்றாலும் பெறப்படாத இலக்கணப் போலியும் வழுவமைதியுமாயுள்ளவை.

வினா. விடையைச் சிறிதுவிளக்கிக்காட்டி நிறுவவியலுமா?

விடை. இயலும்; இச்சூத்திரவுரையுட் சேனாவரையராலும், இளம் பூரணராலும் காட்டப்பட்ட உதாரணங்களுள் ஒன்றேனும்

அந்நான்கிற்று அண்மை விளியில்லை. நச்சினார்க்கினியருரையிலும் பெரும்பாலும் காட்டப்பட்டன விளிமாத்திரத்தில் வரும் விகாரவகைகளே. இயல்புவிளிகள் சிலவே. அவற்றுள் இங்காராயத்தக்கன நான்குமெய்யீற்றியல்புவிளியுதாரணங்களேயாம். அவற்றுள்

(1) நம்பன் என்றது னகரவீற்றுதாரணமாம், இது 'தநநுஎ' என்ற சூத்திரத்தால் விளியேலாவென்று விலக்கப்பட்டவற்று ளடங்காது பிறழ்ந்துநின்று விளியேற்றமையால் வழக்குநோக்கி அகதிககதியாய் இச்சூத்திரத்திலேசினுல் வழுவமைதியாயிங்கமைக்கவேண்டியதாயிற்று. இதனுல் "கடல்வண்ணன்" போலும் விலக்கப்படாத அண்மைவிளி இங்கமைக்கவேண்டாது அண்மைச்சொல்லேயியற்கையாகும் என்ற சூத்திரத்தால் விதிக்கப்பட்டதாமென அறியத்தக்கதாம்.

(2) மாந்தர் கூறீர் என்றது விளிமாத்திரத்தில் "ஆருமருவும் ஈரொடுசிவணு"மென்ற சூத்திரவிதியால் "மாந்தீர்" என்று பிரயோகமில்லாத அநிஷ்டரூபமாய் விளியேற்கவேண்டுமாதலால் அங்ஙனம் வேண்டாவடிவை யொழித்து வழக்குநோக்கி வேண்டிய வடிவாகிய மாந்தர் என்னும் இயல்புவிளியே இங்கமைக்க வேண்டியதாயிற்று. ஆதலால் "துன்றியகனைகழற்றூதர்கொள்கெனப், பொன்றிணிகலன்களுந்துசும்போக்கினுன்" *என்புழித் தூதர் என்பதுபோலும் ரகரவீற்றண்மைவிளி இதன்கண் அமைத்ததாகமாட்டாது.

(3) குரிசில் கூறுய் என்ற உதாரணமும் விளிமாத்திரத்தில் எஞ்சிய விரண்டின் என்னும் சூத்திரவிதியால் குரிசீல் என நித்தியமாய் ஈற்றயல் நீட்டமே பெறுவது அருகிய வழக்காதலால் அதற்குப் பெருவழக்காகிய இயல்பும் கொள்ளவேண்டி இச்சூத்திரத்திலேசான் விகற்பிக்கப்பட்டது. ஆதலாலிது சிலப்பதிகாரத்துள்ள மால் என்பதுபோலு மண்மைவிளிக்குதாரணமாகமாட்டாதென அறிக.

(4) கானல் கூறுய் என்ற உதாரணம் அஃறிணைப்பெயராய் இலக்கணையாலுயர்திணைக்கண் வந்த ஒருமொழியாதலால் அதனீறு உயர்திணைக்குரியதா யெடுத்தோதிய நான்கு மெய்யுளடங்காதாதலால் விளிமாத்திரத்தில் வழுவமைதியாயமைக்கவேண்டியதாயிற்று.

* கம்பராமாயணம் எழுச்சிப்படலம்.

(5) கடவுள் வாழியென்ற உதாரணம் அந்நான்கிற்றுளடங்கிய தாயினும் விளியேற்குமென்ற துணையல்லது விளிமாத்திரத்திலிவ்வாறு விளியேற்குமென்று ஒரு சூத்திரத்தானும் விதந்தோதப்படாமையால் வழக்கு நோக்கி ஆண்டுமியல்பேயா மென்று ஐயமறுத்தற்கு ஈண்டமைக்க வேண்டியதாயிற்று.

(6) விளங்கு மணிக்கொடும்பூணாய் என்ற உதாரணம் இயல்பேயாயினும் பிறவீறுதலா லீண்டாராயத்தக்கதன்று.

(7) கிழவோய் என்ற உதாரணம் அந்நான்கிற்றுச் சொல்லுளடங்கியதா யண்மைவிளியியல்புபெறுமாயினும் விளிமாத்திரத்தில் விதந்தோதப் பெறாத விகாரவிளியேற்று நிற்கும் வழக்குநோக்கி இலக்கணப்போலியா யிங்கமைக்கவேண்டியதாயிற்று. மாயோய் என்றவுதாரணத்துக்கும் இஃதொக்கும். இதனானும், கிழவோன் மாயோன் என்ற சொற்கள் ஒத்தவியல்புடையனவெனவும், அவற்றுள் கிழவோன் என்பது உடம்பொடுபுணர்த்தலாற் பெறப்பட்டதெனவும், மாயோன் என்பது ஒப்பின்முடித்தலாற் பெறப்பட்டதெனவும், அவை அண்மைப் பொருளியல் பாய்விளியேற்றலே இலக்கணமுடையவெனவும், ஆதலாலவையிங்கமைக்க வேண்டாவாயினவெனவும் அறியத்தக்கன.

இதுகாறுங் காட்டிய உதாரணங்களு ளொன்றும் அண்மைவிளிக்குதாரண மாகாதெனவறியத்தக்கது.

(8) இனி 'ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பேணி' 'என்றாற்போலுமண்மைவிளியுமிதனாற்கொள்க' என்று குறிக்கப்பட்டனவே இங்கு காட்டப்பட்ட அண்மைவிளிகளாம். இம்முதற்குறிப்புடைய பாட்டுப் புறநானூற்றின்க ணுள்ளது. அதனுரையுள் இதனிலக்கணம் இவ்வாறன்றி வேறுவழியாற் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வுரையிற் சொல்லியது பொருந்தியதா? இவ்வுரையிற் சொல்லியது பொருந்தியதா? என்ற ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டுவதொன்றன்று. பிறநூலுரையாசிரியரினும் தொல்காப்பிய உரைகாரரே இலக்கணத்திலூன்றியவறிவுடையவரென அத்தலையிலுடம் பட்டிருத்தலால் இதனையங்கீகரிக்கத்தடையில்லை.

இங்கு, 'ஆ;' 'பார்ப்பனமாக்கள்;' 'பெண்டிர்;' 'பிணியுடையீர்;' என நான்கு அண்மைவிளிகள் காட்டப்பட்டன. இவற்றுள் ஆவென்

பது ஈண்டாராய்ச்சிக்குவேண்டுவதன்று. ஏனைமூன்றுமே ஆராயத்தக்கன.

1. பார்ப்பனமாக்கள் என்பதில், மாக்கள் என்பது கள்ளீறேற்ற அஃறிணைப்பெயராய்த் திணைபிறழ்ந்து உயர்திணைக்கண்வந்து அண்மைவிளி யேற்றலால் உயர்திணைக்கே யுரியவாய் ஓதிய அந்நான்கீற்றுளடங்காமையால், 'அண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்ற விதிப்படி இயல்பு பெறுதற்கு இயலாதாயிற்று. ஆதலாலது வழக்குநோக்கி வழுவமைதியாயிங்குஅமைக்கவேண்டியதாயிற்று.

2. பெண்டிர் என்பது முன்னிலைக்குரிய இர் ஈறுபெற்ற பெயராதலாலதனீறு படர்க்கைக்கேயுரியவா யெடுத்தோதிய அந்நான்கீற்றுளடங்காதாதலா 'லண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்ற விதிக்கிலக்காதலின்றி அண்மைவிளியேற்றியல்பாய்நின்ற வழக்குநோக்கி வழுவமைதியாயிங்கமைக்கவேண்டியதாயிற்று.

3. பிணியுடையீர் என்பது முன்னிலைக்குரிய ஈர் ஈற்றுப் பெயராதலால் படர்க்கைக்கேயுரியவா யெடுத்தோதிய அந்நான்கீற்றுளடங்காமையால், 'விளங்குமணிக்கொடும்பூணாய்' என்ற பிறவீறுபோலவே அண்மைவிளியேற்று இயல்பாய்நின்ற வழக்குநோக்கி இலக்கணப்போலியாயமைக்கப்பட்டது.

இங்கு, பிணியுடையார் என்னும் படர்க்கைப்பெயரே விளியேற்புழி 'ஆருமருவுமீரோடிசைவனும்' என்ற சூத்திரவிதிப்படி பிணியுடையீர்-என விலக்கணமுடையதாய் விளிபெறுமாயினும் அஃது அண்மைவிளியாகாது; விளிமாத்திரமேயாம். அதனோடிதனிடை சொல்லாலோருசிறிதும் வேற்றுமையில்லையாயினும் இஃதண்மைப்பொருளுமுடைமையால் இது வேறாயமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறே பிறமெய்யீற்றண்மைவிளிக்கும் இயல்புவிளிக்கும் சொல்வேறுபாடில்லையாயினும் பொருள்வேறுபாடுண்டென்றறியத்தக்கது. (அதாவது நம்பன், மாந்தர், குரிசில், கடவுள் என்று இச்சூத்திரவுரையிற் காட்டப்பட்டஇயல்புவிளியும், 'கடல்வண்ணன்' முதலாக அடியார்க்கு நல்லார்காட்டிய அண்மைவிளியும் வேறுவேறுவகை என்றறிய வேண்டுமென்பதாம்.) இக்கிறுதியிற்காட்டிய நான்குமே அண்மைவிளியென்று உரையிற்காட்டப்பட்டன. இவற்றின்வேறு யுரையில்'இயல்பு'

என்று காட்டப்பட்ட நம்பன் முதலியனவெல்லாம் விளிமாத்திரத்தில் வந்த இயல்புவிளி என்றறியத்தக்கன. ஆதலால் நம்பன் என்பது அன் னீற்றண்மைவிளிக்குக் காட்டன்றென்றறிக.

வினா. 'ஏனைப்புள்ளியீறு' என்னும் சூத்திரவுரையினிறுதியிற்காட்டிய அண்மைவிளியுடன் சேர்த்தே கடல்வண்ணன்முதலிய அண்மைவிளிகளும் அமைக்கப்பட்டனவாகக்கொள்ளுதல் கூடாதோ ?

விடை. கூடாது; ஏனெனில் இங்குக்காட்டிய அண்மைவிளியனுகாரத்தில் முற்கூறிவந்த முறையே என வென்னாது ("ஆவும் ......பேணி") 'என்றாற்போலும்' அண்மைவிளியென்று இலக்கணப்போலியும்வழுவமைதியுமாந்தன்மைபற்றிப் பகுத்து அண்மைவிளியை விதந்து கூறினமையால், இவை போலாத கடல்வண்ணன் முதலிய அண்மைவிளி இதனாற் கொள்ளல் வேண்டாவென்றே காட்டியவாறாயிற்று.

வினா. ணரலள வென்னும் சூத்திரவுரையுட் சேனாவரையர் 'உயிரீற்றுயர்திணைப்பெயர்விளியேற்குமாறுணர்த்தி, இனிப்புள்ளியீற்றுயர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்துகின்றார்'. என்றதனால், அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்ற சூத்திரம் உயிரீற்றுக்கேயுரியதென்று சித்திக்கவில்லையா ?

விடை. இதனால் அச்சூத்திரம் உயிரீற்றுக்கேயுரியதென்று சித்திக்கமாட்டாது. உயிரீற்றுக்கு உரியதென்று சித்திக்கும்; அதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. அச்சூத்திரமுடிய உயிரீற்றுவிளியு மிருப்பதால் அதனது முடிவே உயிரீற்றுவிளி முடிவென்று சொல்லவேண்டியதாயிற்று. அதனால் அச்சூத்திரம் மெய்யீற்றுக்குரியதன்றென்று சொல்லியதாகாது. ஏனெனில் பலவற்றிற்குரியதொன்றைச் சிறப்புடைய ஒன்றனுரிமைபற்றிக் கூறியதுகொண்டு ஏனையவற்றிற்குரியதன்றென்று சித்திக்குமாயின் 'அந்தணர்நூற்கும்' என்ற குறளுள் அந்தணர்நூலென்றது ஏனையர்க்குரியதன்றென்று சித்திக்கவேண்டும். அங்ஙனமின்றென்பதந்த யக்குறளுரையாலறியலாம். இனிப்புள்ளியீற்றுயர்திணைப்பெயர் விளி

யேற்குமாறுணர்த்துகின்ரு ரென்பது ஒரோவழி மாதப் பிறப்பு முதல்நாளில் கலப்புற்றுவந்தாலும், கலப்பற்ற மறு நாளையே முதல்நாளாகவைத்து அம்மாதநினமென்னுவது போலப் பிறப்பட்ட சூத்திரங்களே கலப்பறப் புள்ளியீற்று விளி யுணர்த்துதல்பற்றி அங்ஙனம் கூறப்பட்டதென்க. சேனாவரையர்க்கு மிதுவே கருத்தென்பதை அவருரையுள் யாண்டும் மெய்யீற்றண்மை யியல்புவிளியை யமைத்துக் கொள்ளாது விடுத்ததே சான்றாகக்கொண்டறிக.

வினா. அண்மைச்சொல்லே இயற்கையாகும் என்ற சூத்திரவுரையுள் (உரையாசிரியர்) இறந்ததுகாத்தது என்றெழுதி இருப்பதற்குப் பொருள் என்ன?

விடை. அதன்பொருள் விளங்கவில்லை.

வினா. அதற்கு எய்தியது விலக்கிற்றென்று பொருள்கொள்ளக் கூடாதா?

விடை. உரைகாரர்க்கது கருத்தாயின் 'அளபெடைமிகூஉம்' 'சுட்டு முதற்பெயரே' 'நும்மின்திரிபெயர்' என்ற சூத்திரவுரை களிலவரெழுதியவாறே 'எய்தியது விலக்கிற்று' என்றே ஒரு முறைப்படவெழுதி இருப்பர். அங்ஙனமெழுதாமையா லும், 'முறைப்பெயர் மருங்கின்' என்ற சூத்திரவுரையில் 'இறந்தது காத்தது' என்றெழுதியுள்ளபடி அச்சூத்திரம் எய்தி யதை விலக்காமையாலும் அவர்க்கது கருத்தன்றென்றறிக. அன்றியும் இறந்தது காத்தது என்பது தகுதியால், இறக்கக் கடவதனைக் காத்தது என்றே பொருள்படு மாதலால் இது வும் அத்தலைக்கொரு சாதகமாகமாட்டாது. விகாரவிதியா லிறக்கக்கடவதாய்நின்றவியல்பைக்காத்ததென்று கொள் ளவே பொருத்தமுடையதா யித்தலைக்கே சாதகமாகும்.

வினா. 'அணியாரைக்கூவுமிடத்து அவை இயல்பேயாய் விளியேற் கும்' என்ற இளம்பூரணருரையுள் அவையென்று சுட்டிய தெவற்றை?

விடை. இயல்பாய் விளியேற்கு மென்ற பயனிலைக்கு எழுவாயாய்ச் சூத்திரத்துட் பொதுப்படச் சொல்லப்பட்ட அண்மைச்

சொற்களையே. அணியாரைக் கூவுமிடத்து அவையென்றது அண்மைச்சொல் என்றதன் பொருளை விரித்துரைத்தபடி. அதாவது அணியாரைக் கூவுமிடத்து அச்சொற்கள் (அணியாரைக் கூவும் சொற்கள்) என்றபடி.

வினா. இங்கு, அவையென்றது நான்குயிரீற்றுச் சொற்களையே சுட்டியதாகக் கொள்ளுதல் கூடாதா?

விடை. கூடாது; ஏனெனில் உரைகாரர்க்கது கருத்தாயின் ஏனையுயிரே யென்னுஞ்சூத்திரவுரையில் 'மேற்சொல்லப்பட்ட நான்கு யிருமல்லாத' வெனவும், 'ஏனைப்புள்ளி' என்னுஞ் சூத்திரவுரையுள் 'மேற்சொல்லப்பட்ட நான்கல்லாப்புள்ளி' எனவும் நான்கிற்றை ஆங்காங்குத் தனித்தனி விதந்துகூறிப்போந்த அவர் முன்னும்பின்னுங் கூறியமுறைபற்றி, மேற்கூறப்பட்ட நான்குயிரீற்றண்மைச்சொல் என்றே விதந்தோதியிருக்கவேண்டும். அங்ஙனமின்றி அணியாரைக்கூவுமிடத்து அவை யென்று பொதுப்படக் கூறியகுறிப்பால் அவை யென்றது உயிரும் மெய்யுமாகிய இருவகை நான்கிற்றண்மைச்சொற்களையும் சுட்டியதென்றேயறியத்தக்கது.

வினா. ஆனால் மெய்யீற்றண்மைவிளிக்சேன் உதாரணங்காட்டப் படவில்லை?

விடை. உயிரீற் றண்மைவிளியுள்ளும் ஓகாரவியல்புக் குதாரணங் காட்டப்படவில்லை. ஆதலாற் காட்டவேண்டு முதாரணங்கள் முற்றுங்காட்டாது ஒரு சிலவேகாட்டப்பட்டன வென்றுணரத்தகும்.

வினா. ஓகாரவீற்றுக்குதாரணம் காட்டப்பட்டிருந்து ஏடெழுதுவோரால் விடப்பட்டிருக்கலாகாதா?

விடை. அவ்வாறே மெய்யீற்றுச்கு மெழுதப்பட்டிருந்து விடப்பட்டிருக்கலாம்.

வினா. 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்பது உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுவாமானல் ஈறுப்பற்றி வேறு வேறோதிவருமுறைக்கு விரோதமில்லையா?

விடை. ஒவ்வோரீற்றுக்கும் வேறு வேறு சூத்திரங் கூறவேண்டு மென்பது நியமமின்றும், 'இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும்' என ஒரு சூத்திரத்துள் இரண்டீற்றுக்கு விளிவிதிக்கப்பட்டது (இது ஸஜாதீய விபாகவிதி) 'எஞ்சியவிரண்டின்' என்னுஞ் சூத்திரத்தால்இரண்டீற்றுக்கு விளிவிதிக்கப்பட்டது. (இது ஸஜாதீய ஸமுதாயவிதி) 'புள்ளியுமுயிருமிறுதியாகிய' என்ற சூத்திரத்தில் உயிரீறு மெய்யீறுமாகிய பலவீற்றுவிளி விதிக்கப்பட்டது. (இது விஜாதீய சமுதாயவிதி) இதுபோல்இங்கு விஜாதீய சமுதாய விதியாய் அண்மையியல்புவிளி விதித்தது தவறாகாது.

வினா. உயிரீற்றுக்கெல்லாமிறுதியில் அண்மையியல்புவிளி இருக்குமுறையே மெய்யீற்றுவிளிகளினிறுதியில் அவ்வீற்றண்மைவிளி இருக்கவேண்டியது முறையாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில் இயல்புவிளி விகாரவிளி யென்னு மிரண்டனுள் இயல்புவிளி (அகநிலையென்னும்) அந்தரங்க காரியமாகிய சித்தமாயும், விகாரவிளி (புறநிலை என்னும்) பகிரங்க காரியமாகிய சாத்தியமாயு மிருப்பதால் அந்தரங்க பகிரங்கங்களிரண்டனுள் அந்தரங்கமே முற்பட நிகழ்தற்குரியது என்னும் நியாயத்தால் இயல்பாகிய அண்மைவிளியே முற்பட வைத்தல் வேண்டும். இதனை 'ஆனெனிறுதியியற்கையாகும்' 'அயனெடிதாயினியற்கையாகும்' என அவற்றின் விகாரவிளிக்குமுற்படவே இயற்கைவிளிச் சூத்திரங்களிருத்தலாலறியலாம். ஆதலால் மெய்யீற்றண்மைவிளிச் சூத்திரம் பிற்படவைக்கவேண்டுமென்பது முறையாகாதென்றும் முற்பட வைத்திருப்பதே முறையாகுமென்று மறியத்தக்கது.

வினா. ஆயின் உயிரீற்றண்மைவிளி யிலக்கணத்தை அவ்வாறு முற்படவையாததென்?

விடை. அங்ஙனம் வைப்பிற் சூத்திரம் பல்குமாதலால் மெய்யீறுமகப்படவொருசூத்திரமாக்கவேண்டி யிறுதியில் வைத்தாரென்க. இங்கு முறைபிறழக்கூறிய இச்சூத்திரம் மெய்யீற்றுக்குமுரித்தாமென்பதை ஞாபித்துப் பயனுடைத்தாய் விட்டமையாற் பிழையிலதாமென அறிக்.

வினா. ஆயின் இவ்வாறே முலறப்பெயர்களை ஒரு சூத்திரமாகக் கூறாது வேறு சூத்திரத்தாற் கூறியதென் ?

விடை. முறைப்பெயர்மருங்கின் என்ற சூத்திரத்தால் ஐகாரவீற்றுக்கு ஆகாரம் விதிக்கப்பட்டது. முறைப்பெயர்க்கிளவி யென்ற சூத்திரத்தால் னகரவீற்றுக்கு ஏகாரம் விதிக்கப் பட்டது. இவ்விரண்டு மண்மைச்சொற்போல ஈற்றயலடுத்துநிற்றலும் விதியானொற்றுமையுடைமையு மில்லாதனவாதலால் வேறு வேறு கூறவேண்டியவாயின. இனி னகர ளகரவீற்று முறைப்பெயர்கள் விதியாலொற்றுமை யுடையவாயினும் ஈற்றயலடுத்துநிற்றற்குரியன வாகாமை யால் மாட்டேற்றால் வேறு கூறலாயிற்று.

வினா. அண்மைப்பொருள்பற்றிய உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் விளிச்சூத்திரம் பொதுப்பட வோதியதானால், அவ்வாறு சுட்டுவினைப் பொருள்பற்றிய விலக்குச் சூத்திரங்களையும் பொதுமையில் எல்லாவீற்றுக்கும் ஒன்றாயிருக்கும்படி ஏன் கூறலாகாது ?

விடை. அவை ஒவ்வொன்றும் அடுத்துநிற்றற்குரியவாகாத பல வீறுகளாம். அவற்றுள் னகாரகாரவீறுகளடுத்துநிற்பினும் னகர வீற்றுக்கே சிறப்பாயுள்ள யான்தான் என்னுஞ் சொற்கு நிகர் ரகரவீற்றுளில்லை; ஆதலால் தான் யா னென்பதற்கு வேறு சூத்திரமோத வேண்டும். அன்றியும் ரகர வீற்றுள் நும்மின்றிரிபெய ரடங்காமையால் அதற்கு வேறு சூத்திரஞ் செய்யவேண்டும். இங்ஙனம் சூத்திரம் சுருங்குமாறில்லாமையாற் பொதுமையிலொருசூத்திரமாகக் கூற வியலாதாயிற்று.

வினா. ஆனால் அண்மைச் சொற்போல அளபெடைப் பெயர்களுக் கெல்லாம் விதியொற்றுமைபற்றி ஒரு சூத்திரத்தால் விதிக் கக்கூடாதோ ?

விடை. கூடாது; ஏனென்றால்? அளபெடையீறு உயிரீறு மெய்யீறு போல் நிறுத்தமுறையான் எடுத்தோதப்பட்ட பிரதானமாகாது. உயிரையும் மெய்யையும் சார்ந்தே விதித்தற்குரிய

அப்பிரதானமாயிருப்பதுமன்றி, அண்மைச் சொற்போல ஈறுதோறுந் தவறாது விளிக்குமியல்புமிலவாம். ஒருசேர நிற்றற்குரிய இயைபுமிலவாம். எங்ஙனமெனில்? உயிரீற்றுள் 'அளபெடைமிகூஉம் இகர விறுபெயர்' என்றதனால் ஓரீறே கொள்ளப்பட்டது. இச்சூத்திரத்தை யடுத்து ஐயீற்று முறைப்பெயர் நிற்றலால் னகரவீற்றளபெடையியையுமாறில்லை. ஆதலாலது மாட்டெறியப்பட்டது. அதனை யடுத்து, அன்னகரவீற்றுமுறைப்பெயர்விதியும், சுட்டுமுதற்பெயர் விலக்கும் நிற்கவேண்டு மாதலால் ரகர வீற்றளபெடை யியையுமாறில்லை. அதனாலதுவு மாட்டெறியப்பட்டது. அதனை யடுத்துச் சுட்டு முதற்பெயர் விலக்கி நிற்றலால் லகரளகரவீற் றளபெடை யியையுமாறில்லை. அவ்விரண்டு மொருங்கியைந்த வழி ஒரு சூத்திரத்தால் மாட்டெறியப்பட்டன. அதனையடுத்து அஃறிணை விரவுப்பெயர்க்குப் பல்வகைவிளியும் மாட்டெறியப்பட்டமையால் அதற்கீறுதோறும் வேறு கூறவேண்டாதாயிற்று. இங்ஙனம் பொருந்துமிடமின்மையா லொருசூத்திரத்தா லளபெடைவிளி கூறப்படாதாயிற்று.

வினா. அண்மைவிளிபொதுவரியின் அதனோடியையபுடைய சேய்மை விளிச்சூத்திரத்தோடு சேரவையாத தென்ன?

விடை. இயல்பாகவே விளிக்குறுப்பாகிய அண்மை முற்பட்டும், சேய்மை பிற்பட்டுமிருப்பதால் அம்முறையே முறையாக அண்மைவிளி விளிமாத்திரத்தினும் முற்பட்டுநிற்கத்தக்கதாயும், சேய்மைவிளி விளிமாத்திரத்திற் பிற்பட்டு நிற்கத்தக்கதாயுமிருக்கும் முறைமைபற்றியே இவ்விரண்டும் ஒருசேரவைத்தற்குரியனவல்ல வாயின.

வினா. 'அண்மைச்சொல்லிற் ககரமாகு' மென்ற அண்மைவிளிச் சூத்திரம் என் அவ்வாறு அன்னீற்று விளிமாத்திரத்தின் முற்பட நிற்கவில்லை.

விடை. அங்ஙனம் நிற்பின் அன்னீற்றதிகாரமில்லாமையால் நான்கு புள்ளியீற்றுக்குமுரித்தா யிலக்கியத்தைச் சிதைவிப்பது

மன்றி, அன்னீற்றுக்கு இயல்புவிளியை விலக்கி விகாரவிளியே விதித்ததாய் முடியுமாதலால் அதனை நீக்கக் கருதிப் பின் வைக்கப்பட்டதென வறிக.

வினா. 'அண்மைச்சொல்லேயியற்கையாகும்' என்பது பலவீற்றண்மைவிளிக்கும் பொது விதியாகவும், 'அண்மைச்சொல்லிற் ககரமாகும்' என்பது அன்னீறென்றற்கே யுரிய சிறப்புவிதியாகவுமிருத்தலாற் பொது விதியைச் சிறப்புவிதியே பாதிக்கும் என்னும் நியாயத்தால் அண்மையியல்புவிளி அன்னீற்றுக்கு இல்லையென்று விலக்கப்பட்டதாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில் ஆசிரியர்க்கு அது கருத்தாயின் விளிமாத்திரத்தினும், அண்மைவிளியே முற்பட்டு நிற்கவேண்டிய முறைபற்றியும், அதிகாரம்பற்றியும் 'அன்னெனிறுதி யாவாகும்மே' என்ற அன்னீற்று விளிச்சூத்திரத்தின் முற்பட்டு வைத்திருக்கவேண்டும். அதாவது 'அன்னெனிறுதி அகரமாகும்' என முன்னும், 'அண்மையில்வழி ஆவாகும்மே' எனப் பின்னுமாகக் கூறியிருக்கவேண்டுமென்பதாம்) அங்ஙனம் வையாது அன்னீற்றுவிளிக்கு முதன்மையாமிடத்தில், 'அண்மைச்சொல்லே யியற்கையாகு' மென்ற சூத்திராந்தர்க்கெதமாயுள்ள (அன்னெனிறுதி யியற்கையாகும்' என்னும்) ஒருசூத்திரநிற்பதாகவே பாவித்து, அதனுடன் விரோதியாதிருக்கவேண்டி 'அன்னெனிறுதி யாவாகும்மே' என்ற அன்னீற்று விளிமாத்திரச் சூத்திரத்துக்கும் பிற்பட்டு நிற்கும்படி 'அண்மைச்சொல்லிற் ககரமாகும்' என்ற சூத்திரம் வைக்கப்பட்டிருத்தலால் அது, தனக்கு விஜாதீயமாய் முற்றும் விரோதியாய் அடுத்து முற்பட்டு நிற்கும், 'அன்னெனிறுதியாவாகும்மே' என்ற அன்னீற்று விளிமாத்திரச் சூத்திரத்தைப் பாதிப்பதல்லது, ஸஜாதீயமாய் ஏகதேச விரோதியாய் இடையீடுபெட்டுச் சேய்மையிலிருக்கும் 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்ற அண்மை யியல்புவிளிப் பொதுச்சூத்திரத்தை பாதிக்கமாட்டாது. இதனால் அன்னீற்றுச் சொற்களெல்லாம் அண்மை

விளியில், இயல்பும், ஈறுதிரிதலுமாகிய இருவகை விகற்பமு முடையவாமெனவறிக.

வினா. அன்னீற்றுச்சொற்களுக்கு அண்மைவிளியில் இயல்பும், ஈறு திரிதலுமாகிய இருவகையான விகற்பமுண்டென்று ஆசிரியர் கொண்டனராயின் 'அண்மைச்சொல்லிற் ககரமுமாகும்' என எச்சவும்மைகொடுத்துக் கூறாததற்குக்காரணமென்ன?

விடை. எச்சவும்மைகொடுப்பின், முற்சூத்திரத்தால் அன்னீற்றுக்கு விதிக்கப்பட்ட ஆகாரத்தையே தழுவி, அன்னீறு அண்மை விளியில் அகரமும், ஆகாரமுமாகத்திரிந்து விகற்பமாம் எனப்பொருள்பட்டு இலக்கியத்தைச் சிதைக்குமாதலால் அவ்வெச்சவும்மைகொடுத்துக் கூறக்கூடாதாயிற்று.

வினா. ஆயின், 'அண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்றசூத்திரம் உயிரீற்றின் முதற்கண் வைக்கற்பாற்றாகவும், ஆங்கு வையாது உயிரீற்றினிறுதிக்கண் வைத்த காரணமென்ன?

விடை. உயிரீற்று விளியின் முதற்கண்வைப்பின், அங்கு மெய்யீற்றதிகாரமில்லாமையால் 'உளவெனப்பட்ட வெல்லாப்பெயரும்' என்புழிப்போல மெய்யீற்றையு மதிகரித்துக்கொள்ள வேண்டும். அவ்வண்மைவிளியின் விசேடமாகிய 'அண்மைச்சொல்லிற்ககரமாகு' மென்ற விகார விளியுமங்கு முடிக்கவேண்டும்; அதற்கு னகாரவீறு தனியே யதிகரிக்க வேண்டும். அதன்பின் உயிரீற்று விகாரவிளி தொடங்குங்கால் அதிகாரப்பட்டு நின்ற மெய்யீற்றை யொழிக்கவேண்டும். அங்ஙனமொழித்த மெய்யீற்றை உயிரீற்று விளி முடிவில் மறுமுறை யதிகரித்துக்கொள்ளவேண்டும். இங்ஙனம் அதிகாரப்பட்டதொன்றன் காரியமுடியுமுன் அதனை யொழிப்பதும், பிறிதொன்றன் காரியமுடித்து மறுமுறையாக வொழித்ததை யதிகரிப்பதும் முறைகேடாமாதலால் உயிரீற்றின் முதற்கண்வையாது அதிகாரமுறைமை வெகு சுலபமாயியையும்படி உயிரீற்று விளிக்கும் மெய்யீற்று விளிக்குமிடையே சிங்கநோக்கு நிலையில் வைக்கப்பட்டதாமென அறிக.

வினா. ஆனால் உரைகாரர்கள் இச்சூத்திரம் சிங்கநோக்கென்று சொல்லி யிருக்கிறார்களா?

விடை. சொல்லவேண்டுமென்பதில்லை. சிங்கநோக் கிலக்கணமும் அதன் பயனும் பிறவிடங்களிற் சொல்லப்பட்டன வாதலானும், மாணாக்கர்க் கறிவு வளர்தற்பொருட்டு உய்த்துணர வைத்துச் செல்வதே உரைகாரர்க்கெல்லா மியல்பாதலானும், அவர் சொல்லாதுவிட்டது இல்லாததென்பதற்கு நிரூபணமாகாதாகையாலும் அது பாதகமாகமாட்டாது.

(போதும்; நிற்க)

இவ்வாறாக விசாரித்தமட்டில் நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், தொல்காப்பியர் இவர்கள் கூறுவனவெல்லாம் அடியார்க்கு நல்லார்கொள்கைக்குச் சிறிதும் விரோதமின்றி யிணங்கி யிருப்பனவாகவே தோன்றுகின்றன. ஆதலால், 'கிழவோன் என்னுஞ் சொல் அண்மைவிளியில் வந்ததென்றற்கு இச்சூதிர மாதாரமாதலில்லை யென்பதே பலவுரை யாசிரியர் கருத்துமா' மென்று நண்பரவர்கள் கூறிய முடிவு நிலையாதாயிற்று.

உண்மை இப்படியிருக்க நண்பரவர்கள் தாமாராய்ச்சிசெய்தவளவில் தொல்காப்பியநூலும், இளம்பூரணருரையும், சேனாவரையருரையும், நச்சினார்க்கினியருரையும் அடியார்க்கு நல்லார்கொள்கைக்கு முற்றும் மாறாயிருப்பனவாகப் பலவாறு சொல்லுகிறார்கள். அவற்றுள் ஒன்றேனும் நிலைபெறுகிறதாவென்று பார்ப்போம்.

1. நம்பன் என்னும் இயல்புவிளியை 'ஏனைப்புள்ளி' யென்னுஞ் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் காட்டியதனால் அண்மைவிளியமைத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அது அண்மைவிளியா யமைத்துக்கொள்ளப்பட்டதில்லை என்றும், 'தநநுஎ' என்ற சூத்திரத்தால் விளி யேலாதென விலக்கப்பட்டது பிறழ்ந்து வந்து விளியேற்றுநின்ற வழக்குநோக்கி வழுவமைதியா யமைக்கப்பட்டதென்றும் 'ஏனைப்புள்ளியீறு' என்னுஞ் சூத்திரவுரை விசாரத்தில் முன்னமே விளக்கப்பட்டது. இதனால், 'ஏனைப்புள்ளியீறு விளிகொள்ளா' வென வேண்டா கூறியதற்குப் பயன்கூறு முகத்தால் அமைத்துக்கோடலின்

காரணம் பிறிதொன்று சிறந்ததாகக் காணுதலரிதாமென்று கூறிய முடிவு நிராகரிக்கப்பட்டது. அன்றியும், இயல்பீறுபோல ஒரு சில பெயரேபற்றிவரும் நான்குயிரீற்றண்மை விளி யுதாரணங்களைக்காட்டினும் வினைப்பெயருருப்பாயும், பெயருருப்பாயும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ல், ன், உன், ஒன், உள், ஒள், ஒர், ஏள் எனப்பல திறப்படவரும் மெய்யீற்றண்மைவிளி யுதாரணங்கள் மிகப்பலவாகவும், இவற்றையெல்லாம் 'ஏனைப்புள்ளி' என்னும் சூத்திரத்தாலமைப்பதைக்காட்டினும், இவற்றின் மிகச்சிலவாகிய உயிரீற்றண்மை விளியை 'ஏனையுயிரே யென்னும் சூத்திரத்தா லமைத்துக்கொள்ளுதலே ஏற்புடையதாயிருப்பவும், அதனை யவ்வாறமைத்துக்கொள்ளாமையால், அவற்றின் மிக்க மெய்யீற் றண்மைவிளியும், 'ஏனைப்புள்ளி' என்னும் சூத்திரத்தாலமைக்கப்படாவெனவும், அவ்வுயிரீறு போலவே இம் மெய்யீறும் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தால் விதிக்கப்படுமெனவுமறிக.

2. இனி, 5, 6ம் பத்திகளிற் சொல்லிய விஷயங்களெல்லாம் 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்ற சூத்திரம் உயிரீற்றுக்குரியதில்லை யென்று சொல்லக்கூடாதென்பதைச் சாதிப்பதல்லது பிறிதில்லை. அதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. இனி 7ம் பத்தியில், பொதுவான சேய்மை விளிச்சூத்திரத்தை அடுத்து அண்மை விளிச்சூத்திரம் வைக்கப்படாமையால் உயிரீற்றுக்கே யுரியதாமென்று துணியவேண்டுமென்கிறார்கள். விளிமாத்திரத்திற்கு அண்மை விளி முற்பட்டதாயும் சேய்மை விளி பிற்பட்டதாயும் பொருட்பெற்றியாலும் சொல்லியல்பாலும் நன்கறியக்கிடத்தலால், அம்முறையே முறையாகச் சேய்மைவிளி யிறுதியிலும், அண்மைவிளி விளிமாத்திரத்துக்கு முற்பட்டும் வைக்கப்பட்டனவென முன்னமே அறிவிக்கப்பட்டமையால் 'அண்மைசசொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரம் உயிரீற்றினும் மெய்யீற்றுக்கே மிகச் சிறந்ததென்று துணிதற் கிடமுண்டா

பிருக்கிறது. ஆதலால் இது உயிரீற்றுக்கே சிறந்ததென்று சாதித் தற்குச் சேய்மை விளியொடு வையாமை சாதகமாகமாட்டாது. பவ ணந்தி முனிவர் சேய்மை யண்மை விளிகளை யொரே சூத்திரத்திற் சொல்லிய முறையை யுதாரணங் காட்டுகிறார்கள். அம்முறை சிறந்த தாகத் தொல்காப்பியனார் கருதியிருந்தால், இவரும் அவர்போல அன் னீற்று அண்மைவிளிவிகாரத்தை யிறுதியில்வைத்திருக்கவேண்டுமே. அங்ஙனம் வையாமையால் அவர்க்கது கருத்தன்றெனக.

சேய்மை விளிச்சூத்திரம் பொதுவென்று தோன்றற்கு "உள வெனப்பட்ட வெல்லாப்பெயரும்" என்றாற்போன்ற பொதுமையை விளக்கும் அடைமொழி இச்சூத்திரத்தி லில்லாமையாலிது பொதுவா காதென்றும், இவ்வாறு பொதுமையை விளக்கும் அடைமொழி யில் லாத முறைப்பெயர்ச் சூத்திரங்களொவ்வொன்றும் எல்லா வீற்றுக் கும் பொதுவாகாது ஒவ்வோரீற்றுக்கே யுரியதாயிருப்பது இதற்குச் சான்றாகுமென்றும் காட்டி, பொதுமையை விளக்க வியக்த வாசகம் ஒன்று நியதமாயிருக்கவேண்டும் என்று வெகு பெலமாய் வாதாடு கிறார்கள்.

சேய்மைவிளிச்சூத்திரத்தில் உயர்திணையதிகாரமில்லாமையா லதனையும் அகப்படுத்தவேண்டி "உளவெனப்பட்ட வெல்லாப்பெயரு" மென்று விசேடிக்கவேண்டியதாயிற்று. முறைப்பெயர்ச் சூத்திரங்க ளெல்லாம் முன்னும் பின்னுந் தன்னீறே நிற்ப இடையே கிடத்தலாலு, இடநோக்கிச் சிறப்பீற்றுக்குரியவாயின, அங்ஙனமின்றிப் பிறவீறு அடுத்து நிற்றற்குரியவேற் பொதுவேயாம். ஆதலால் அது காட் டாகமாட்டாது. பொதுவை விளக்க அடைமொழியாகிய வியக்த வாசகம் வேண்டுமென்றும், சிறப்புப்பொருளை அடைகொடாத பொதுச்சொல்லால் வழங்கவேண்டுமென்றும் ஒரு புதிய இலக்கணம் சொல்லுகிறார்கள். இஃதுண்மையானால் தாமரை விசேடங்களை செந்தாமரை, வெண்டாமரை என அடைகொடுத்து வழங்குவது

றென்றும், அவற்றை தாமரை யென்று அடைகொடாது வழங்குவதே இலக்கணமென்றும், இருவகைத் தாமரையையும் வழங்குமிடத்துத் தாமலரையெனப் பொதுப்படவழங்குவது தவறென்றும், போதுத்தாமரை யென்று வியக்தவாசகம் சேர்த்துச்சொல்வதே முறையென்றும் ஏற்படவேண்டும். அன்றியும், 'விளிமரபின்றொடக்கத்தில்' விளியெனப்படுப' என்பதே பிழையாய் முடியவேண்டும். ஏனெனில் பலவகைப்பட்ட வெல்லாவிளியும் என வியக்தவாசக மில்லாமையானென்க. இதனால், 'அச்சூத்திரவமைதி பொதுப்படவிருப்பினும் அது பொதுவாதற்கு ஒரு வியக்தவாசகம் வேண்டும்' என்ற முடிவும் நிலையாதாயிற்று.

இனி நண்பரவர்கள் 8ம் பத்தியில் பெயர்களைத்திணைபற்றியும் ஈறுபற்றியும் வகுத்து விளிமரபு கூறுதலே தொல்காப்பியரது கருத்தென்கின்றார்கள். இஃதுண்மையே; ஆயினும் இஃதெவ்வளவுதூரம் பொருந்துமென்று பார்ப்போம். 'இ ஈ ஆகும்' ஐ ஆயாகும்' என்ற சூத்திரம் இரண்டுயிரீற்றுக்குரிய விபாகவிதியேயாயினும் சூத்திரம் சுருங்குமாறு இனம்பற்றி ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. அல்லாக்கால் இரண்டுசூத்திர மாகவேண்டும். 'ஓவும் உவ்வும் ஏயொடு சிவணு, மென்ற சூத்திரம் இரண்டுயிரீற்றுக்குரியதாயினும் சமுதாய விதியாலொன்றுபட்டமைபால் ஒரு சூத்திரமாயிற்று. அல்லாக்கால் இரண்டு சூத்திரமாகவேண்டும். ஏனையுயிரே என்ற சூத்திரம் எட்டுயிர்களுக்குரிய சமுதாய விதி. ஆதலால் இதுவும்முன்போ லொருசூத்திரமாயிற்று; அல்லாக்கால் இதுவும் பல சூத்திரமாகவேண்டும். இவ்வாறு மெய்யீற்றுள்ளும் 'ஆருமருவும்' 'எஞ்சியவிரண்டி னிறுதிப்பெயரே." என்பனவும், 'ஏனைப்புள்ளி' என்பதும் பொதுவாயிருத்தல் காண்க. இனிக் 'கிளந்த விறுதியஃறிணை விரவுப்பெயர்' என்றசூத்திரம் எல்லாவீற்றுக்கும் பொதுவா யொன்றாயிற்று. அல்லாக்கால் இதுவும் பல சூத்திரங்களாகவேண்டும். அதன்மேல் "உளவெனப்பட்ட" என்றசூத்

திரம் எல்லாத்திணைக்கும் எல்லாவீற்றுக்கும் பொதுவாயொரு சூத்திர மாயிற்று. இதனால், ஆசிரியர் இனத்தாலேனும் விதியாலேனும் ஓரிடத் தில் ஒன்றுபடக்கூறற் குரியனவற்றையும் அவ்வவ் வீறுதோறும் வேறுவேறு விதித்துச்செல்லும் கருத்துடையரல்லர் என்பது வெளி யாயிற்று. ஆகவே அண்மைப்பொருள்பற்றி இயல்பாகிய ஒருவிதி பெறுதற்குரிய உயிரீறு மெய்யீறுகளை வேறு வேறு பிரித்தோதவேண் டாது ஒரு சூத்திரத்தாலோதுவதே ஆசிரியர்கொண்ட முறை என் பது நன்கு தெளியத்தக்கது.

இனிச் சுட்டு வினாப்பெயர்களும், அளபெடைப் பெயர்களும் முறையே விலக்கினும், விதியினும் ஒருவழிப்படுவனவா யிருப்பவும் அவற்றை ஈறுதோறும் வேறு வேறோதியதை தம் கக்ஷிக்காதரவாகக் காட்டுகிறார்கள். இவை தனித்தனி ஒருநிலைக்களப்படுதற்குரி யனவல்லவென முன்னமே காட்டப்பட்டன. இவையெல்லா மொரு சூத்திரமாயமைத்தற்குரிய தோரிடத்தை நண்பரவர்கள் சுட்டிக்காட்டி ஒரு சூத்திரமாயோதி அதில் விரோதமில்லை என்று நிரூபித்துவிட் டால் அதற்குப்பரிகாரம் பின்புசொல்லப்படும். அங்ஙனம் நிரூபித்துக் காட்டும்வரை அவ்வுதாரணங்கள் தம் கக்ஷிக்காதரவாகமாட்டாவென வறியத்தக்கன.

இனி நண்பரவர்கள் பத்தாம் பத்தி தொடங்கி நேமிநாத நூலாத ரவு தம்கக்ஷிக்குச் சாதகமாயிருப்பதாகக் காட்டுகிறார்கள். அதில் அடி யார்க்கு நல்லார் கொள்கைக்கு ஆதரவில்லை என்று சொல்லலாமே யல் லது விரோதமிருப்பதாகக் காட்டற்குச் சிறிதுமிடமில்லை. ஏனெனில் அதில் உயிரீற்றுச் சொற்களுக்கு அண்மை விளியியல்புண்டென்று சொல்லியிருக்கிறது. இது இருதலைக்கும் உடம்பா டாதலால் விரோ திக்கவில்லை. இதுபோல் மெய்யீற்று அண்மைவிளியி யல்புண் டென்று சொல்லப்படவில்லை. இதுவும் விரோதமாகமாட்டாது. ஏனென்றால்இந்நேமிநாதம் மிகச்சுருங்கிய நூலாதலால் ஒருவகைத்தா

சொல்லியதுகொண்டே பிறிதொருவகைக்கு மண்மைவிளியியல் பரமென்ப தறிந்துகொள்ளலாமென்று விட்டிருக்கலாம். மெய்யீற்றுக்கு மண்மை விளி யுண்டென்பது பொருட்பெற்றியாலும் அந்நூலுள்ளே அன்னீற்றண்மை விகாரவிளி சொல்லப்பட்டிருத்தலாலும் அறியலாம். அதனால் மெய்யீற்றுக்கு அண்மைவிளியியல்பு உண்டோ இல்லையோ வென்ற ஐயமுண்டாகக்கூடுமே யல்லது இல்லையென்ற நிச்சய முண்டாகமாட்டாது. அந்நிச்சய முண்டாகவேண்டுமாயின் மெய்யீற்றுக்கு அண்மைவிளி இல்லையென்று விலக்கியிருக்க வேண்டும். அங்ஙனம் விலக்காமையால் 'அநுக்தமந்யதோக்ராஹ்ய' மென்ற நியாயத்தால் தொல்காப்பியச் சூத்திரங்கொண்டு அடியார்க்கு நல்லார் காட்டியபடி மெய்யீறுகளுக்கும் அண்மைவிளியியல்புண் டென்றறியத்தக்கதேயாம். ஆகையால் நேமிநாத மேற்கோளும் நண்பரவர்கள் கக்ஷியை நிலைநாட்ட மாட்டாதாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால், நண்பரவர்கள் இலக்கணநூலாராய்ச்சிகொண்டு பலவாறாகக் காட்டிய விரோதங்களெல்லாம் பரிகரிக்கப்பட்டமையால் அடியார்க்கு நல்லார் காட்டியபடி மெய்யீற்றண்மை விளி விதிச்சூத்திரம், 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்பது ஆக்ஷேபமற்றதாயிற்று.

பத்திராதிபர்.

---